DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker
Homelife/Future Reality Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX Community


Ontario approved Pawn Brokers Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
Kokulan Baskaran
Tel : 647-344-6600

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1290
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Thursday December 24, 2020

# அமெரிக்கத் தயாரிப்பான Moderna தடுப்பூசி 1.2 மில்லியன் குப்பிகள் ஜனவரி இறுதியில் கனடாவிற்கு கிடைக்கவுள்ளன




அமெரிக்காவில் உள்ள நிறுவனமொன்றால் தயாரிக்கப்பெற்று, அரசினால் அங்கீகரிக்கப்பெற்ற தடுப்பூசியான ஆழனநசயெ தற்போது கனடிய சுகாதார தலைமையகத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே அந்த ரகத்தை உடனடியாக கனடாவிற்கு இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட சுகாதார தலைமைகம் எடுத்துள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் 2021 ஜனவரி மாதம் இறுதியில் மேற்படி தடுப்பூசியின் 1.2 மில்லியன் குப்பிகள் கனடாவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் நேற்று புதன்கிழமை கனடாவின் அங்கீகாரத்தைப் பெற்ற மேற்படி தடுப்பூசி வகையின் 168,000 குப்பிகள் முதற்கட்டமாக நாளை வெள்ளிக்கிழமை கனடாவிற்கு வந்து சேரவுள்ளன. மேற்படி விபரங்களை கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் ஒட்டாவாவில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார். அவர் அங்கு உரையாற்றுகையில் "Pfizer/BioNTech தடுப்பூசி வகைகள் ஏற்கெனவே கனடிய அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்டிருந்தாலும் உடனடித் தேவைக்கு தடுப்பூசிகளின் எண்ணிக்கை பற்றாக்குறையாக உள்ளதால், அங்கீகரிக்கப்பெற்ற வேறுவகை தடுப்பூசிகள் இறக்குமதி செய்வதற்கான கட்டளைகள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கிடையில் "Pfizer/BioNTech வகை தடுப்பூசிகள் அடங்கிய தொகுதியும் எதிர்வரும் ஜனவரி மாத முற்பகுதியில் கனடாவினால் பெறப்பட்டு உடனடியாக அவை நாட்டில் பழங்குடிகள் அதிகமாக உள்ள பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்" என்று தெரிவித்தார்.

# HomeLife Future RealtyInc வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கும் வைபவம்









திரு செல்வா வெற்றிவேல் தலைமையில் இயங்கும் HomeLife Future RealtyInc வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் 2020ம் ஆண்டிற்கான வருடாந்த விருது வழங்கும் வைபவம் தற்போதைய நோய்த்தொற்று கட்டுப்பாடுகள் காரணமாக எளிமையான முறையில் நடைபெற்றது. விருதுகள் பெற்ற முகவர்கள் அங்கு மகிழ்ச்சியோடு கலந்து கொண்டு தங்கள் கௌரவங்களைப் பெற்றனர்.

இங்கே காணப்படும் படங்களில் மேற்படி நிறுவனத்தின் சார்பில் Sick Kids வைத்தியசாலைக்காக சேகரிக்கப்பெற்ற தொகைளை வீடு விற்பனை முகவர்களான சிவா சண்முகநாதன், கைலன் தில்லைநாதன் ஆகியோர் நிறுவனத்தின் பிரதிநிதியிடம் கையளிப்பதையும். செல்வா வெற்றிவேல் தம்பதி மகிழ்ச்சியுடன் நிற்தையும். 2020ம் ஆண்டின் அதி உயர் விற்பனை விருது பெற்ற அமலன்- அபி தம்பதி வெற்றிக்கேடங்களுடன் நிற்பதையும் காணலாம்.

*(படங்கள்: நன்றி ரவி அச்சுதன்).*

# Royal Le Page Ignite வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கும் வைபவம்



கனடாவில் வெற்றிகரமாக இயங்கும் Royal Le Page Ignite RealtyInc வீடு விற்பனை முகவர் நிறுவனத்தின் 2020 ம் ஆண்டிற்கான வருடாந்த விருது வழங்கும் வைபவம் தற்போதைய நோய்த்தொற்று கட்டுப்பாடுகள் காரணமாக எளிமையான முறையில் நடைபெற்றது. விருதுகள் பெற்ற வீடு விற்பனை முகவர்கள் அங்கு மகிழ்ச்சியோடு கலந்து கொண்டு தங்கள் கௌரவங்களைப் பெற்றனர்.

இங்கே காணப்படும் படங்களில் மேற்படி நிறுவனத்தின் சகோதரப் பங்களாளர்களாக விளங்கும் திருவாளர்கள் சுகன் சிவராஜா, உதயன் சிவராஜா, ராஜ் சிவராஜா மற்றும் குமார் சிவராஜா ஆகியோர் தங்களுக்குரிய வெற்றிச் சான்றிதழ்களோடு நிற்பதைக் காணலாம் *(படம்: நன்றி- ரவி அச்சுதன்)*

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

**GET APPROVED WITHIN 24 HOURS**

**416.298.2777**

**$375 Mo.**

**www.mortgageSolutions.ca**

**MONTHLY SAVING $2,478**

**SAVE UPTO 75% REFINANCE**



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

Ultimate Mortgage Group Lic 11995

info@mortgageSolutions.ca

Off: 416.298.2777

Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

GHURUS TOWING

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN:
(416) 894-6244

BASEMENT
வாடகைக்கு உண்டு

Bellamy / Eglinton
சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள ஒரு வீட்டில் 2 bedrooms, 2 washrooms with separate entrance ஒன்று மேலும் சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to all amentities.

Call: (416) 707-4350
(416) 659-0386

HELP WANTED

Full-time & Part-time Spray Painters & Sanders needed for a kitchen furniture finishing shop.

Call:
(416) 636-3655




AZ Drivers Wanted

Hiring AZ Driver For Single & Team DriverFor USA Runs.
Must Have Minimum 6 Months Driving Experience.

Please Call: Vije Bala
(437) 997-6478

உதயன் கதிரோட்டம்

# வடக்கு அரசியலில் தாழ்ந்து செல்லும் தமிழரசும் கூட்டமைப்பும் யாழ்ப்பாணமும் நல்லூரும் நல்ல உதாரணங்கள்

இதுவரை காலமும் வடக்கு அரசியலிலும் தமிழர் விடயங்களிலும் கண்களை மூடிக்கொண்டு செயற்பட்ட தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இது வரை மக்களை ஏமாற்றிய வண்ணம் செய்த அரசியல் 'பணிகள்' அவர்களை பொருளாதார ரீதியாக வளர்த்து விட்டுள்ளன என்றே கூற வேண்டும். இதனால் மேற்படி இரண்டு தமிழர்கள் சார்ந்த கட்சிகளும் வடக்கு அரசியலில் ஆட்டம் நிலைக்கு வந்துள்ளதை எமது மக்கள் கண்களால் நிதர்சனமாகப் பார்க்கின்றார்கள். மேலும் தற்போதைய அரசியல் தளத்தில்
யாழ்ப்பாண மாநகர சபையும் நல்லூர் பிரதேச சபையும் இந்த வீழ்ச்சிக்கு நல்ல உதாரணங்களாகத் தெரிகின்றன.

ஆனால் இந்த வீழ்ச்சி பற்றியும் தாழ்வை நோக்கிச் செல்லும் நிலை பற்றி கட்சியின் தலைவர் சம்பந்தர் ஐயாவிற்கு ஒன்றுமே தெரிவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. அவரது கண்பார்வை அற்றுப்போய்விட்டது. முதுமை அவரை இயங்கவிடாமல் செய்து விட்டுது.

ஆனால் அவர் தலைமையில் சுமந்திரன், 'மாவை' சேனாதிராஜா மற்றும் ஸ்ரீதரன் சிவஞானம் போன்றவர்கள் திட்டமிட்டு செயற்பட்டு தங்கள் நலன்களை கவனித்துக் கொண்டு நடத்திய அரசியல் செயற்பாடுகள், எமது மக்களுக்கு ஒன்றையுமே பெற்றுத் தரவில்லை. ஆனால் சுமந்திரனுக்கு மட்டும் பத்து இராணுவத்தினர் எந்நேரமும் பாதுகாப்பு வழங்கும் 'இலாபத்தை' மட்டும் தந்திருக்கின்றது.

எமக்கு ஆச்சரியமாக உள்ளது. எப்படி இவர்கள் மக்கள் விரோத அரசியலை-யும், தர்மத்திற்கு எதிரான காரியங்களையும் செய்யத் துணிந்தார்கள் என்பது மக்களுக்குப் புரியவில்லை. ஆனால் அது அரசியலில் அவதானிப்புக் கொண்டவர்களுக்கு நன்கு புரிந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியில் தனது அரசியலை ஆரம்பிக்க ரணிலோடு இணைந்த அவரை சம்பந்தரோடு 'பேசி' தமிழ்க் கட்சியின் பக்கம் அனுப்பி வைத்தார் ரணில். அதன் தாக்கம் தான் கடந்த மைத்திரி ஆட்சியில் ரணில் பிரதமராக இருந்து நடத்திய தமிழர் விரோத அரசியல். ஆதனால் பலனடைந்தவர்கள் சம்பந்தர் ஐயா தொடக்கம் அடிமட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள் வரையும்.

ஆனால் கடந்த தேர்தலின் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் அவர்களை மேலும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளன.

யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளராக இம்மானுவேல் ஆர்னோல்ட்டைத் தவிர வேறு ஒருவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிறுத்தினால் ஆதரிக்கத் தயாரென தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அத்தோடு, நல்லூர் பிரதேச சபைக்கும் புதிய வேட்பாளரை நியமித்தால் அவரையும் ஆதரிக்கத் தயாராக இருப்பதாக முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் ஒரு கூட்டத்தில் யாழ்ப்பாண மாநகர சபை விவகாரம் தொடர்பாக தெரிவிக்கையில், "யாழ். மாநகர சபை முதல்வருக்கு இ.ஆர்னோல்ட்டை தவிர இன்னொருவரையும், நல்லூர் பிரதேச சபையின் தவிசாளருக்கு தியாகமூர்த்தி தவிர்ந்த இன்னொருவரையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக அறிவித்தால் அவர்களை ஆதரிக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணி தயாராக இருக்கிறது.

அதேநேரம், இரண்டு சபைகளிலும் பதவி விலகிய ஆர்னோல்ட், தியாகமூர்த்தி இருவரையுமே வேட்பாளர்களாக நிறுத்தினால் எமது கட்சி அவர்களை எதிர்க்கும். அதேநேரம், எமது எதிர்ப்பையும் மீறி அவர்கள் வெற்றிபெற்று ஆட்சியமைத்தாலும் அவர்கள் சமர்ப்பிக்கும் வரவு செலவுத் திட்டத்தையும் எதிர்ப்போம்.

இதன்மூலம், இரண்டு சபைகளும் கலையும் நிலைமை ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பே ஏற்றுக்கொள்ள வேண்டும்" என அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான ஒரு நிலைக்கு வடக்கு தமிழர் அரசியலை கொண்டு வந்த தமி-ழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தொடர்ந்து ஏமாற்று அரசி-யலையே செய்யத் துணிந்து நிற்கின்றது. சுமந்திரனும் 'மாவை'யும் இதற்கு நல்ல உதாரணங்கள். மாவை தேர்தலில் தோற்றுப் போனாலும் தானாகவே வந்து பல பதவிகளில் அமர்ந்து கொண்டுள்ளார். இன்னும் பதவிகளை அவர் 'குறி' வைத்துள்ளார் என்பதும் வெளிச்சமாகத் தெரிகின்றது.

மேலும், சுமந்திரன் இவ்வளவு விமர்சனங்களைச் சந்தித்த பின்னரும் இலங்கை அரசாங்கத்தை போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து காப்பாற்றுவதற்கு முனைவதை சாதாரண தமிழ் மக்கள் மட்டுமல்ல, இரண்டு தலைவர்களான விக்கினேஸ்வரன் அவர்களும் கஜேந்திரகுமார் அவர்களும் விளக்கமாகத் தெரிவித்துள்ளார்கள். ஆனால் அனைவருமே மிகக் கவனமாக இருந்து சுமந்திரனையும் மாவையையும் கண்காணித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் இருவரினதும் 'சுயநல' அரசியல் தொடராமல் இருக்க...

# இலங்கை இறக்குமதி செய்யவுள்ள நான்கு வகை கொரோனா தடுப்பூசிகள்

கொரோனா வைரசினை கட்டுப்படுத்தக் கூடிய நான்கு மருந்துகளுக்கு இலங்கை தேசிய ஆராய்ச்சி பேரவை அனுமதி வழங்கியுள்ளது என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்

ஒக்ஸ்போர்ட்பல்கலைகழகத்தின் அஸ்டிராஜெனேகா,மொடேர்னா,பைசர் பயோன்டெக் ஆகியவற்றின் மருந்துகளுக்கும் ரஸ்யாவின் ஸ்புட்னிக் ஆகியவற்றிற்கே இலங்கையின் தேசிய ஆராய்ச்சி பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

நான்கு மருந்துகளும் இலங்கையில் பயன்படுத்துவதற்கு பொருத்தமானவை என தேசிய ஆராய்ச்சி பேரவையின் தலைவர் ஹெமந்த டொடாம்பஹல தெரிவித்துள்ளார்.

இந்த நான்கு மருந்துகளில் இலங்கைக்கு பொருத்தமான மருந்தினை பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சினை கேட்டுக்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்த ஆவணங்களை சுகாதார அமைச்சிடமும கொவிட் 19 தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்ணான்டோபுள்ளேயிடமும வழங்கிவிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் மாதமளவில் மருந்துகளை பெறுவதற்கான நடவடிக்கைகள் இடம்பெறலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு பேராசிரியர் சங்கரநாராயணன் நடத்தும் சைவ வகுப்புகள் ஜனவரி 5ம் திகதி ஆரம்பம்

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளுக்குச் சென்று சமய உரைகளை ஆற்றிவருவதன் மூலம், புகழ்பெற்ற பேச்சாளராகத் திகழும் தமிழ்நாடு சேலத்தைச் சேர்ந்த பேராரசியர் சங்கரநாராயணன் அவர்கள் நடத்தும் உலகளாவிய சைவ வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ம் திகதியன்று இணையவழி ஊடாக நடைபெறுகின்றது என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த சைவ வகுப்புகளில் கனடா அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்தும பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இதுவரை பதிவு செய்துள்ளார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு 108 வகுப்புக்கள் மூலம் பல சைவ சமய பாடங்கள் இந்த திட்டத்தின் மூலம் கற்பிக்கப்படவுள்ளன. பயிற்சியின் இறுதியில் திறமைகளைக் காட்டும் மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. கனடாவிலிருந்து பதிவு செய்கின்றவர்களுக்கு மாதம் 12 டாலர்கள் மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு வற்ஸ்அப் அழைப்பு மூலம் 919443929560 அல்லது, 918825887116 ஆகிய இலக்கங்களையோ அன்றி கனடாவில் 416 587 0552 என்னும் இலக்கத்தையோ அழைக்கலாம். அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு avssankr@gmail.com என்னும் விலாசத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

# வைரஸூம் ராஜபக்சக்களும்: தோல்விகளாகும் வெற்றிகள்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



ராஜபக்சக்களின் ஆட்சியை ஒரு தென்னிலங்கை விமர்சகர் மெரிடோகிரசி-அநசவைழஉசயணல என்று அழைப்பார். கொழும்பு டெலிகிராப் இணையத் தளத்தில் எழுதிய ஒரு கட்டுரையில் அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார். மெரிட்டோகிரசி என்பது மெரிட் அதாவது தகமை அடிப்படையில் அல்லது தகுதி அடிப்படையில் ஒருவர் ஆட்சியைப் பிடிப்பது. தகுதி என்றால் என்ன? யுத்தத்தை வென்றதால் கிடைத்த தகுதிதான். அதுதான் யுத்த வெற்றி வாதம். அது சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தின் 2009 க்குப் பின்னரான புதுப்பிக்கப்பட்ட வடிவம். யுத்த வெற்றிதான் ராஜபக்சக்களின் அரசியல் முதலீடு. அதை வைத்தே கோட்டாபய ஜனாதிபதியாக வந்தார்.

2018 ஈஸ்டர் குண்டுவெடிப்பு அவர்களுக்கு வேறு ஒரு தகுதியை பெற்றுக்கொடுத்தது. என்னவெனில் அது போன்ற குண்டுவெடிப்புகளை தடுப்பதற்கு யுத்தத்தை வென்ற இரும்பு மனிதர்கள் தேவை என்ற ஒரு கூட்டு உணர்வை கூட்டு அபிப்ராயத்தை அது சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. எனவே ஒரு இரும்பு மனிதரை சிங்கள மக்கள் ஜனாதிபதியாக தெரிந்தெடுத்தார்கள். அதாவது யுத்த வெற்றி வாதம் 2018 ஈஸ்டர் குண்டு வெடிப்போடு தன்னை 2018,2019 க்குரியதாக புதுப்பித்துக் கொண்டது. அதன்பின் கோவிட்-19 அதுவும் ஓர் உலகளாவிய அனர்த்தம். அதை வெற்றி கொள்வதற்கு அதிகாரங்களைத் தன்வசம் குவித்து வைத்திருக்கும் ஓர் இரும்பு மனிதர் தேவை என்று சிங்கள மக்களில் பெரும்பகுதியினர் நம்பினார்கள். எனவே மறுபடியும் ராஜபக்‘க்களுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அள்ளிக் கொடுத்தார்கள்.

யுத்த வெற்றி வாதம் கோவிட்-19இன் பெயரால் தன்னை 2020-க்கு புதுப்பித்துக் கொண்டது இவ்வாறு யுத்தம்குண்டுவெடிப்புபெரும் தொற்று நோய் போன்றவற்றை வெற்றி கொண்டதன் மூலம் தமது தகைமையை நிரூபித்து அதன்மூலம் ஓர் அரசனுக்கு நிகரான அதிகாரங்களை பெற்றுக் கொடுக்கும் விதத்தில் 20 ஆவது திருத்தத்தையும் அவர்கள் நிறைவேற்றி விட்டார்கள்.

ஆனால் இவ்வாறு தொடர்ச்சியாக தாம் பெற்ற வெற்றிகளின் மீது அவர்கள் கட்டியெழுப்பிய அரசாங்கம் இப்பொழுது சவால்களை எதிர்கொள்ளத் தொடங்கியிருக்கிறது. ஏவையெல்லாம் அவர்களுக்கு முதலீடுகள் ஆகியனவோ அவையெல்லாம் இப்பொழுது பூமராங் ஆக திரும்பி வரத் தொடங்கிவிட்டன.

கோவிட்-19 இரண்டாவது தொற்றலை ப்ரண்டிக்ஸ் தொழிற்சாலையில் தொடங்கியபோது அதைத் தொடர்ந்து எல்லா ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களையும் அரசாங்கம் தீவிரமாக கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் தொடங்கியது. இதன் விளைவாக ஏழைத் தொழிலாளர்கள் மோசமாக நடத்தப்பட்டார்கள். தொற்றாளர் என்று சந்தேகிக்கப்பட்ட எழைத் தொழிலாளிகள் மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் அதாவது பத்து நிமிடத்துக்குள் வீட்டை காலி செய்து கொண்டு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு செல்லுமாறு கட்டளையிடப்பட்டார்கள். அரசாங்கம் நோய்த்தொற்று சந்தேகநபர்களை குற்றவாளிகள் போல கையாளத் தொடங்கியது. இது தொடர்பில் அந்த ஏழை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின் கருத்துக்களைத் திரட்டி மரிசா டீ சில்வா என்ற மனித உரிமை செயற்பாட்டாளர் கிரவுண்ட் வியூஸ் இணையதளத்தில் ஆங்கிலத்திலும் மாற்றம் இணையதளத்தில் தமிழிலும் ஒரு செய்திக் கட்டுரையை பிரசுரித்திருந்தார்.

அதில் பாதிக்கப்பட்ட ஏழை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் இந்த அரசாங்கத்தை பற்றியும் படைத்தரப்பு பற்றியும் கூறும் தகவல்கள் தொகுக்கப்பட்டிருந்தன. எந்த படைத்தரப்பின் வெற்றியைக் குறித்து அவர்கள் கிரிபத் சமைத்து கொண்டாடினார்களோ அதே படைத்தரப்பு தங்களை எவ்வளவு இழிவாகவும் கேவலமாகவும் நடத்தியது என்று அவர்கள் அந்தக் கட்டுரையில் குறிப்பிடுகிறார்கள். இந்த அரசாங்கத்தின் வெற்றிக்காக அவர்கள் பாடுபட்டார்கள் வாக்களித்தார்கள். இப்பொழுது அதே அரசாங்கத்துக்கு எதிராக திரும்பிவிட்டார்கள்.

அரசாங்கம் நோயாளர்களை குற்றவாளிகள் போல நடத்துகிறது என்ற அபிப்பிராயம் பரவலாக உண்டு. தென்னிலங்கையில் ஒரு நோய் தொற்றுச் சந்தேகநபர் தப்பி ஓடிவிட்டார்.அவரை அரசு அலுவலர்களும் காவல் துறையும் கையாண்ட விதம் சமூக வலைத்தளங்களில் காணொளியாக பரவலாக பகிரப்பட்டது.அது கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியது.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)





இடையூறு இல்லாத ஆனந்தம்.
அதி-வேக விமான பயணங்கள்.

*கொழும்பு மற்றும் இதர பிற பயண இலக்குகளுக்கு சுலபமான இணைப்புகள்†*

இந்த டிசம்பரிலிருந்து, மத்திய கிழக்கு, இந்திய துணைக்கண்டம் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சுலபமான பயண இணைப்புகளுக்கு வசதி செய்துகொடுக்கும் எங்கள் டோரொன்டொ -தோஹா அதிவேக விமானப் பயணங்கள் நீங்கள் உங்கள் அன்புக்குரியவர்களுடன் மீண்டும் சேர்ந்திருக்க வழி அமைத்துக் கொடுக்கும்†.

நீங்கள் தோஹா செல்லும் வழியில், விருது பெற்றுத் தந்த சேவைகளை அனுபவித்து மகிழுங்கள், Boeing 787 Dreamliner விமானத்தில் மூன்று வகை சேவைகளிலிருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து சௌகரியத்தின் உச்சத்தில் திளைத்திருங்கள், அதில் Air Canada Signature Class கிடைநிலை-தட்டை இருக்கைகள், இடம் அதிகமிருக்கும் பிரீமியம் எகானமி வகுப்பு மற்றும் வசதியான எகானமி வகுப்பும் அடங்கும்.

மாற்றும் கட்டணம் இல்லாத* விரிவான புக்கிங் ஆப்ஷன்கள், நெகிழ்வு மற்றும் துறையில் முன்னணி இடத்திலிருக்கும் Air Canada CleanCare+ புரொக்ராம், உங்கள் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் தொடுவதற்கு அவசியமில்லாத பையோசேஃப்டி நடவடிக்கைகள் பின்பற்றப்படும் அதிகரித்த பாதுகாப்பு ஆகிய வசதிகளுடன் உங்கள் அடுத்த பயணத்தை இப்பொழுது திட்டமிடுங்கள்.

**aircanada.com**-ல் இப்பொழுதே புக் செய்யுங்கள் அல்லது உங்கள் டிராவல் ஏஜென்டுடன் தொடர்பு கொள்ளுங்கள்

Voted Best Airline in North America

A STAR ALLIANCE MEMBER | AIR CANADA

†Connection flights beyond Doha operated by Qatar Airways.
*You can make a one-time change without a fee for all new or existing bookings made through February 28, 2021, for original travel between March 1, 2020, and February 28, 2022.

# PRESIDENT OF CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE MR. SANTHA SAYS "THANK YOU" TO THE MEMBERS

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் நன்றி தெரிவிக்கின்றார்

அண்மையில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவராக மூன்றாவது தடவையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. சாந்தா பஞ்சலிங்கம், தன்மீது நம்பிக்கை வைத்திருக்கும் சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் மற்றும் தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகள் அனவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்.

மேற்படி கடிதத்தில், தன்மீது நம்பிக்கை வைத்து தலைவர் பதவியை முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒப்படைத்து தனக்கு ஒத்துழைப்பு வழங்கும் அனைத்து அங்கத்தவர்களோடு தொடர்ந்து கைகோர்த்து பிறக்கப்போகும் புத்தாண்டு 2021 இலும் சேவையாற்ற காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

---

Message from the President

Dear Members,

First, I want to take this opportunity to thank the members for electing me for the 3rd time to lead the Chamber.

Your encouragement and trust have made me a strong leader and I feel that I can do more for the Chamber and for the Tamil business community.

The year 2020 was to be the best year for the Tamil Chamber of Commerce with our own building, more corporate members and even a stronger community. Unfortunately, the unprecedented pandemic has put us in a slow mode. As we move forward into 2021, we must follow through new lifestyle: social distancing, customer interaction from behind plexiglass, the missing smile that is hidden by a mask and the most noticeable of a missing handshake. However, that will not stop us from accomplishing what we have promised to our members.

As you all know we have purchased the building in May 2020 without a mortgage or a loan, now we are in the process of renovating it to fit our members' needs. Due to Covid-19 lockdowns, the renovation permit from the city is delayed, however, we are hoping that the renovation will start in the new year and we can have it ready for our members' use in 3 months and we need your support to complete the project.

We take our commitments to our members and our Corporate Partners seriously. As part of our corporate member benefits, we have launched a virtual networking event called "M2M by Zoom". This is a bi-weekly virtual event and gets ready to promote your business to our members. Become a corporate member or upgrade your membership to get more benefits. Contact our board for more information.




For now, the events will be virtual, we hope soon we will be back face to face. I look forward to working with everyone who is associated with this chamber and wish another successful year to all local businesses. Together we will succeed and prosper.


As a final note, I would like, on behalf of the Chamber Board of Directors, to extend my heartfelt wishes for a peaceful and prosperous year 2021!

Santha Panchalingam
President
Canadian Tamils' Chamber of Commerce
(416) 200-5470

# 'ஞானம்' சஞ்சிகையில் தமது படைப்புக்கள் பிரசுரிக்கப்படுவதை பெருமையாகக் கருதும் எழுத்தாளர்கள் உள்ள காலம் உருவாகியுள்ளது

"இலங்கையின் தலைநகராம் கொழும்பிலிருந்து வெளியாகும் "ஞானம்" மாதாந்த சஞ்சிகையில் தமது படைப்புக்கள் பிரசுரிக்கப்படுவதை எழுத்தாளர்களும் கட்டுரையாளர்களும் கவிஞர்களும் பெருமையாகக் கருதும் ஒரு காலம் தற்போது உருவாகியுள்ளது என்றால் அது மிகையாகாது. காரணம், இந்த சஞ்சிகையில் இன மதம் வேறுபாடு பாராமல் அனைத்து எழுத்தாளர்களுக்கும் களம் கொடுக்கப்படுகின்றது. மேலும் பெரும்பான்மை மொழியான சிங்களத்தில் எழுதப்பட்ட அரிதான சிறுகதைகள் மற்றும் கவிதைகள், கட்டுரைகள் ஆகியன தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. முக்கியமாக தற்போதைய நெருக்கடியான கொரோனாக் காலத்திலும் இந்த இதழ் மாதம் தவறாமல் வெளியிடப்படுவதும், அந்த இதழ் பற்றிய விமர்சனக் கூட்டங்கள் இணையவழி ஊடாக நடத்தப்படுவதும், அவற்றில் உலகெங்கும் பரந்து வாழும் எழுத்தாளர்களும் வாசகர்களும் தவறாமல் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொள்வதும் போற்றுதற்குரிய".









இவ்வாறு கூறினார் கொழும்பில் கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் "வகவம்" என்று அழைக்கப்படும் "வலம்புரி கவிதா வட்டத்தின்" தலைவரும் கவிஞருமான என். நஜ்முல் உசைன் அவர்கள்.

"ஞானம்" சஞ்சிகையின் 247 வது இதழ் தொடர்பாக, இணையவழி ஊடாக நடத்தப்பெற்ற கலந்துரையாடலில் இதழில் வெளியான கவிதைகள் தொடர்பாக விமர்சன உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த சனிக்கிழமை 19ம் திகதி நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலை "ஞானம்" சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு. தி. ஞானசேகரன் ஆரம்பித்து வைத்தார். மேற்படி கலந்துரையாடலில், கனடா, அவுஸ்த்திரேலியா, ஜேர்மனி, இங்கிலாந்து, இலங்கை, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து எழுத்தாளர்களும் வாசகர்களும் கவிஞர்களும் கலந்து கொண்டார்கள்.

முதலில், கனடா வாழ் "சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன் அவர்கள் இதழில் வெளியாகிய கட்டுரை பற்றிய தனது பார்வையை மிகவும் தெளிவாகவும் ஆர்வத்தோடும் எடுத்துரைத்தார். கடடுரைகளில் குறிப்பிட்டுள்ள விடயங்களுக்கு அப்பால் பல ஆழமான விடயங்களையும் தேடி எடுத்து அனைவரும் திருப்தியடையும் வண்ண்ம் தனது உரையை சமர்ப்பித்தார்.

அடுத்து பிரபல எழுத்தாளரும் மின் பொறியியலாளருமான திருமதி. மைதிலி தயாபரன் அவர்கள் இதழில் வெளியாகியுள்ள சிறுகதைகள் பற்றிய தனது கருத்துக்களை எடுத்துரைத்தார். அவற்றுள் இலங்கையிலிருந்து மட்டுமல்ல, பலம் பெயர்ந்த நாடுகளிலிருந்தும் சிறுகதைகளை எழுதியிருந்த எழுத்தாளர்களையும் ஏனையோர்களையும் விதந்துரைத்து சிறுகதைகள் அனைத்தும் வாசகர்களின் பாராட்டைப் பெறும் வகையில் படைக்கப்பெற்றுள்ளன என்று குறிப்பிட்டார்.

அடுத்த இங்கிலாந்து வாழ் எழுத்தாளரும், பரிசுகள் பல பெற்றவருமான வன்னியூர் இரா. உதயணன் அவர்கள், "ஞானம்" இதழ் 247 இல் இடம்பெற்றுள்ள் ஏனைய பொதுவான அம்சங்கள் மற்றும் குறிப்புக்கள் ஆகியவை தொடர்பாக தனது கருத்துக்களைச் சொல்லி சஞ்சிகை ஆசிரியரையும் அவரது வெளியீட்டுக் குழுவினரையும் பாராட்டினார்.

தொடர்ந்து பார்வையாளர்கள் பலர் முன்வந்து தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். அவற்றுள் பல விவாதத்திற்குரிய விடயங்கள் இடம்பெற்று பின்னர் கருத்துப் பகிர்தலின் மூலம் அவற்றுக்கான விளக்கங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

முக்கியமாக இந்த இணையவழி கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் பல நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், இரவு பகல் என வேறுபட்ட நேர மாற்றங்களைக் கொண்டவர்களாக இருந்தாலும் அனைவரும் இறுதிவரை உற்சாகமாகக் கலந்து கொண்டு இறுதிவரை காத்திருந்து விடைபெற்றனர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

# இலங்கைக்கு அமெரிக்க அரசின் நிதி நிறுவனம் வழங்கிய 89 பில்லியன் ரூபாய் அன்பளிப்புத் தொகை இரத்து செய்யப்பட்டது



இலங்கை அரசிற்கு அபிவிருத்தி உதவி அன்பளிப்பு நிதியாக இவ்வருடம் வழங்குவதென உறுதியளிக்கப்பட்டு அமெரிக்க அரசின் நிதி நிறுவனம் வழங்கவிருந்த 89 பில்லியன் ரூபாய்கள் அன்பளிப்புத் தொகை இரத்து செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கையின் கொழும்பு நகரத்தில் உள்ள ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் பொது அலுவல்கள் பிரிவின் முகாமையாளரால் ஊடக நிறுவனங்களுக்கு அனுபபிவைக்கப்பட்ட கடிதத்தின் பிரதி இங்கு காணப்படுகின்றது.

மேற்படி அன்பளிப்பு நிதியாக 89 மில்லியன் ரூபாய்களை வழங்கவிருந்த அமெரிக்காவின் அரசு சார்ந்த American Millennium Challenge Corporation என்னும் நிறுவனத்தின் முகாமைச் சபை, அமெரிக்க அரசின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அறிவிறுத்தலுக்கு அமைய இந்த நிதி அன்பளிப்பை நிறுத்தியுள்ளது.

இந்த நிதி இரத்து செய்யப்பட்ட விவகாரம் இலங்கை ஜனாதிபதியையும் பிரதமர் மற்றும் உயர் அதிகாரிகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளதாக எமது கொழும்புச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி நிதி அன்பளிப்பு இரத்து செய்யப்பட்டமைக்கு காரணங்களாக பின்வருவன தெரிவிக்கப்பட்டுள்ளதை இங்கு உள்ள கடிதத்தில் காணக்கூடியதாக உள்ளது.

அமெரிக்காவிடமிருந்து உதவி பெறும் நாடுகளின் ஆர்வம், மற்றும் பங்கேற்பு, வெளிப்படைத் தன்மை மற்றும் கடனற்ற நிதியுதவி பெறுவதற்கான பொறுப்புக் கூறல் என்பன மேற்படி அமெரிக்க நிறுவனத்தின் எதிர்பார்ப்புகள் ஆகும்.

ஆனால் இலங்கை இவ்வாறான நிபந்தனைகளையோ அன்றி அமெரிக்காவின் எதிர்பார்ப்புக்களையோ பூர்த்தி செய்யவில்லை என்றே இங்கு புலனாகின்றது.

முக்கியாமாகச் சொல்வதானால், அண்மைக்காலங்களில சீனாவோடு இலங்கை அரசு கொண்டுள்ள மிக நெருக்கமான உறவு மற்றும் சீனாவின் விருப்பத்திற்கேற்ப பல அரச உடமைகள் அந்த நாட்டுக்கு கையளிக்கப்பட்டுள்ளமை என்பது குறித்து அமெரிக்கா அறிந்து வைத்துள்ளது என்றே கருதப்படுகின்றது.

இலங்கை செய்திகள்

# இங்கிலாந்தில் கண்டறியப்பட்ட சார்ஸ்-கோவிட்-2



"சார்ஸ்-கோவிட்-2" என்ற புதிய கோவிட் வைரஸ் மாறுபாடு ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனத்துக்கு இங்கிலாந்து தெரிவித்துள்ளது. இந்த புதிய வைரஸ் அதிகம் பரவக் கூடியதாகவும், இளைஞர்களை பாதிக்கக் கூடியதாக இருக்கும் என நோய்க் கட்டுப்பாட்டுக்கான ஐரோப்பிய மையம் மதிப்பிட்டுள்ளது. இந்த வைரஸ் மாறுபாடு, 17 மாற்றங்கள் கொண்ட தொகுப்பாக உள்ளது. அதில் குறிப்பிடத்தக்கது ஸ்பைக் புரதத்தில் உள்ள என்501ஒய் மாற்றம். இந்த மாற்றம் வைரசை மனிதர்களிடையே அதிகமாகவும், மிக எளிதாகவும் பரவச் செய்யலாம். எனவே, இதற்கான தொற்று நோயியல் கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைக்கான நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (எஸ்ஓபி) மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. நுழைவுப் பகுதி மற்றும் கடந்த 4 வாரங்களில் (நவம்பர் 25ஆம் தேதி முதல் டிசம்பர் 23ஆம் தேதி வரை) இங்கிலாந்திலிருந்து அல்லது இங்கிலாந்து வழியாக மாறி வந்த சர்வதேசப் பயணிகளிடம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசு வெளியிட்ட எஸ்ஓபி விவரிக்கிறது. இவர்களிடம் ஆர்டி-பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ள வேணடும் என எஸ்ஓபி-யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் இருந்து விமானங்கள் டிசம்பர் 23ஆம் தேதி முதல் டிசம்பர் 31ஆம் தேதி வரை அல்லது அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. டிசம்பர் 21ஆம் தேதி முதல் டிசம்பர் 23ஆம் தேதி வரை இங்கிலாந்து விமான நிலையங்களில் இருந்து, மற்றும் இங்கிலாந்து விமான நிலையங்கள் வழியாக மாறி இந்தியா வரும் அனைத்துப் பயணிகளும் ஆர்டி-பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். அவர்களுக்குத் தொற்று இருப்பது கண்டறிப்பட்டால், அவர்களுக்கு ஸ்பைக் மரபணு அடிப்படையிலான ஆர்-பிசிஆர் பரிசோதனை செய்யப் பரிந்துரைக் கப்படுகிறது. தொற்று உறுதி செய்யப்பட்ட பயணிகள், அந்தந்த மாநில சுகாதாரத்துறை ஒருங்கிணைப்புடன் தனிமை மையங்களில் தனிமைப்படுத்தப்படுவர். அவர்களின் மாதிரிகளை புனேவில் உள்ள தேசிய வைராலஜி மையம் அல்லது அதே போன்ற இதர மையங்களுக்கு அனுப்பத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். அங்கு மேற்கொள்ளப்படும் மரபணு பரிசோதனையில், புதிய கோவிட் வைரஸ் மாறுபாடு இருப்பது கண்டறிப்பட்டால், அவர்கள் சிறப்புத் தனிமை மையங்களில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ நெறிமுறைகளின் படி சிகிச்சை அளிக்கப்படும். விமான நிலையத்தில் நடத்தப்படும் ஆர்டி-பிசிஆர் பரிசோதனையில் தொற்று இல்லை என்றால் அவர்கள் வீட்டுத் தனிமையில் இருக்க அறிவுறுத்தப்படுவர். பயணிகள் சோதனைக்குச் செல்லும் முன்பாக எஸ்ஓபி குறித்து விளக்கப்படும். இதுகுறித்த அறிவிப்புகள் விமானத்துக்குள்ளும் தெரிவிக்கப்பட வேண்டும்.

கடந்த ஒரு மாதத்தில் இங்கிலாந்தில் இருந்த வந்த பயணிகள் மாவட்டக் கண்காணிப்பு அதிகாரிகள் மூலம் தொடர்பு கொள்ளப்பட்டு கண்காணிக்கப்படுவர். கடந்த 4 வாரங்களில் இங்கிலாந்தில் இருந்தும், இங்கிலாந்து விமான நிலையங்கள் மூலமாக விமானம் மாறியும் வந்தவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் கண்டறிப்பட்டுக் கண்காணிக்கப்படுவதை மாநில அரசுகள்/ஒருங்கிணைந்த நோய்க் கண்காணிப்புத் திட்ட அதிகாரிகள் உறுதி செய்வர். அவர்களும் மருத்துவ நெறிமுறைப்படி சோதனை செய்யப்படுவர். அவர்களுக்குத் தொற்று இருப்பது கண்டறிப்பட்டால் அவர்களும் சிறப்புத் தனிமை மையங்களில் தங்கி சிகிச்சை பெற வேண்டும்.

# 'அழைத்தார் பிரபாகரன்' என்ற நூலொன்றை எழுதிய கிரிக்கெட் வர்ணனையாளர் அப்துல் ஜப்பார் சென்னையில் காலமானார்

தமிழ் மொழியில் முதல் கிரிக்கெட் வர்ணனையாளர் என்ற பெருமையைப் பெற்றவரும் தலைவர் பிரகாகரன் அவர்களால் பாராட்டப்பெற்று பின்னர் 'அழைத்தார் பிரபாகரன்' என்னும் நூலை எழுதிய பெருமைக்குரிய சாத்தான்குளம் அப்துல் ஜப்பார் (வயது 81) உடல்நலக் குறைவால் இன்று செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.




1980களில் கிரிக்கெட் போட்டிகளுக்கான தமிழ் வர்ணனையாளராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் அப்துல் ஜப்பார். முதன் முதலாக சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் தமிழகம் - கேரளா அணிகளுக்கு இடையேயான போட்டியை தமிழில் வர்ணனை செய்தார்.

கிரிக்கட் போட்டிகளை நேரடி வர்ணனை செய்வதில் புகழ் பெற்றவர் இவர். தமிழ்மொழி மூலம் சுவையாக இவ்வர்ணனையைச் செய்யமுடியும் என்பதை நிரூபித்து, தமிழ் நெஞ்சங்களைக் கவர்ந்தவர். தமிழ்மொழியின் முதலாவது கிரிக்கட் வர்ணனையாளர் என்ற புகழும் இவருக்குள்ளது.

கலைஞராக, எழுத்தாளராகப் பரிணமித்தவர். முன்னர், இலங்கையில் இவர் வாழ்ந்த காலத்தில் நாடகத் துறையில் செல்வாக்குள்ளவராக இருந்தார். இலங்கை வானொலியில் இவரின் பங்களிப்பு பெரிது. வானொலி நாடகங்களில் இவர் குரலைக் கேட்டு மகிழ்ந்த காலமொன்றிருந்தது.

1982-ம் ஆண்டு சென்னையில் இங்கிலாந்து - இந்திய அணிகளுக்கு இடையேயான போட்டியையும் தமிழில் வர்ணனை செய்தார் அப்போது ஜப்பார். அப்போது முதல்வராக இருந்த எம்ஜிஆர், அப்துல் ஜப்பாரை நேரில் அழைத்து பாராட்டினார்.

பின்னர் 1999-ம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் வர்ணனையாளராக ஐபிசி தமிழ் வானொலிக்காக பயணியாற்றினார். 2004-ம் ஆண்டு லண்டனில் உலகக் கிரிக்கெட் போட்டிகளை தமிழில் வர்ணனை செய்தார்.

அப்துல் ஜப்பாரின் தமிழ் வர்ணனையை பெரிதும் நேசித்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், சமாதான காலத்தில் அப்துல் ஜப்பாரை தமிழீழத்துக்கு அழைத்து விருந்து அளித்து உபசரித்தார். 'அழைத்தார் பிரபாகரன்' என்னும் நூலில் தமிழீழப் பயணம், பிரபாகரனுடனான சந்திப்புகளை எழுதியவர் அப்துல் ஜப்பார்.

பன்முகத்தன்மை கொண்ட தமிழ் ஆளுமையான அப்துல் ஜப்பார் சில நாட்களுக்கு முன்னர் சென்னையில் மாரடைப்பால் காலமானார். அவரது மறைவு தமிழ்ச் சமூகத்துக்கு பேரிழப்பாகும்.

# சுமந்திரனின் 'கபடத்தனத்திற்கு' இணங்க மறுத்த விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோர்

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் மாரச் மாத கூட்டத் தொடரில் தமிழ்த் தேசியக் கட்சிகள் சார்பில் முன்வைப்பதற்காவென சுமந்திரனால் முன்மொழியப்பட்ட திட்ட யோசனையை விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோர் அடியோடு நிராகரித்துள்ளனர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான ம.ஆ.சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட ஜெனீவாவுக்கான முன்மொழிவு யோசனையை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுடன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அடியோடு நிராகரித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் சார்பில் ஜெனீவா அமர்வு தொடர்பில் கூட்டாக செயற்படுவதற்கான முன்மொழிவு யோசனை ஒன்றை தயாரித்து, சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் கஜேந்திரகுமார் ஆகிய இருவருக்கும் அவர்கள் தரப்பு கருத்துகளை அறியும் வகையில் சுமந்திரனால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பில் தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் சுமந்திரனுக்கு அனுப்பிய பதிலில் குறித்த திட்ட யோசனை இலங்கை அரசாங்கத்திற்கு மீண்டும் கால அவகாசத்தை பெற்றுக் கொடுப்பதாகவே அமையும் என்பதை சுட்டிக்காட்டி அடியோடு நிராகரித்துள்ளார்.



அத்துடன், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது ஐ.நா.வினால் விசேடமாக உருவாக்கப்பட்ட சர்வதேச குற்றவியல் ஆயத்திற்கு இலங்கை விடயத்தைக் கொண்டு செல்லுமாறு ஐ.நா.பொதுச் சபையையும், ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலையும் கோருமாறு தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு ஏன் கோரக்கூடாது என்றும் அதற்கு தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் அனைதது தமிழ்க் கட்சிகளது ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து விரைவில் பதில் வழங்குவதாக தெரிவித்திருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அதனை நிராகரிப்பதாக சுமந்திரனுக்கு பதிலளித்திருப்பதாக அறிய முடிகிறது.

சுமந்திரனின் குறித்த திட்ட வரைபில், இருதரப்பு போர்க்குற்றம் என்ற விடயத்தை வலியுறுத்திக் குறிப்பிட்டிருப்பது, தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைத்து சர்வதேசத்தை கையாள்வது என்ற பெயரில் மறைமுகமாக இலங்கை அரசாங்கத்திற்கு மீண்டும் கால அவகாசத்தை பெற்றுக் கொடுப்பதுடன் சார்வதேச ஆதரவையும் தொடர்ந்து வழங்கவைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருப்பதே, அதனை இரு தரப்பும் அடியோடு நிராகரிக்க காரணம் என நம்பகரமான தகவல் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வைரஸூம் ராஜபக்சக்களும்: தோல்விகளாகும் வெற்றிகள்?

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நோய் முறியடிப்பு நடவடிக்கைகளில் ஒரு படைத் தரப்பை இறக்கினால் அதுவும் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் அதிக பலம் பெற்றிருக்கும் ஒரு படைத்தரப்பை இறக்கினால் அது நோயாளிகளை பயங்கரவாதிகள் போலவே நடத்தும் என்று பல மாதங்களுக்கு முன்னரே ஒரு சிங்கள ஊடகவியலாளர் ட்விட்டரில் பதிவிட்டிருந்தார். அதுதான் இப்பொழுது நாட்டில் நடக்கிறது.

கோவிட்-19 தொற்றிய புதிதில் அது ஒரு புது ஆபத்து என்பதனால் நோயா-ளிகளையும் நோய் தொற்று சந்தேக நபர்களையும் அரசாங்கம் கடுமையாக அரசாங்கம் கையாண்ட பொழுது ஏனையவர்களுக்கு அது ஒரு பாரதூரமான பிரச்சினையாக தெரியவில்லை. நோய்க் காவிகளை அவ்வாறு கடுமையாக கையாண்டால்தான் ஏனையவர்கள் தங்களை தற்காத்துக் கொள்ளலாம் என்று ஒரு பொது அச்சம் இருந்தது. முழுச் சமூகமும் தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டது.

இக்கூட்டுத் தற்காப்பு உணர்வைஅச்சத்தை அரசாங்கமும் அதிகாரிகளும் முழுமையாக பயன்படுத்தினார்கள்.அந்தக் கூட்டுத் தற்காப்பு உணர்வானது இரும்பு மனிதர்கள் தேவை என்ற ஒரு தற்காப்பு நிலைப்பட்ட கூட்டு முடிவாக மாறியது.அதை அரசாங்கம் வெற்றிகரமாகக் கையாண்டு நாடாளுமன்ற தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிட்டவாக வெற்றிகளைப் பெற்றது. முதலாவது நோய்த் தொற்றலையின் போது தம்மைத் தற்காத்துக் கொண்ட பெரும்பாலானவர்கள் இரண்டாவது நோய்த் தொற்றலையின்போது அதைக் கட்டுப்படுத்தத் தவறிய அரசாங்கத்துக்கு எதிராக மாறத் தொடங்கி விட்டார்கள். இரும்பு மனிதர்களால் வைரஸை கட்டுப்படுத்தலாம் என்ற நம்பிக்கை நொறுங்க தொடங்கிவிட்டது. அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல முதலாவது தொற்றலையின் போது சொன்னார் புலிகளை தோற்கடித்த எமக்கு வைரஸ் ஒரு பிரச்சினை அல்ல என்ற தொனிப்பட. ஆனால் புலிகளும் வைரஸூம் ஒன்றல்ல என்பதனை கடந்த சில மாதங்கள் நிரூபித்திருக்கின்றன. எனவே எந்த வைரஸை வெற்றி கொண்டதாக அரசாங்கம் மார்தட்டிக் கொண்டதோ அது முழுமையான வெற்றி அல்ல என்பதை கடந்த சில மாதங்கள் நிரூபித்து விட்டன. இது முதலாவது.

நோய்த்தொற்று சிறைச் சாலைகளுக்குள் பரவியபொழுது மகர சிறைச்சாலையில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் சிங்களக் கைதிகள் கொல்லப்பட்டார்கள். அங்கேயும் பூமராங் அரசாங்கத்துக்கு எதிராகத் திரும்பியது. சிறைச்சாலை வாசலில் பொலிசாரின் காலடிகளில் விழுந்து கதறும் ஏழைச் சிங்களத் தாய்மாரின் கண்ணீர் அரசாங்கத்தின் வைரசுக்கு எதிரான வெற்றிகள் யாவும் தோல்விகளாக மாறுவதை காட்டும் ஒரு குறியீடு எனலாமா? இது இரண்டாவது.

மூன்றாவது- யுத்த வெற்றி வாதத்தை முதலீடாகக் கொண்டு ஈஸ்டர் குண்டு வெடிப்புக்குப் பின் தனிச்சிங்கள வாக்குகளால் அரசை அமைப்போம் என்று திட்டமிட்டு ஆட்சியைக் கைப்பற்றிய ராஜபக்சக்கள் தமிழ் மக்களை மட்டுமல்ல முஸ்லிம் மக்களையும் முழுமையாக தற்காப்பு நிலைக்குத் தள்ளினார்கள். கடந்த ஓராண்டு காலமாக இந்த அரசாங்கம் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. ஆனால் இப்போதிருக்கும் அரசாங்கத்தின் நீதி அமைச்சர் ஒரு முஸ்லிம்தான். அவர் கடந்த வாரம் கூறினார்....இப்படியே நிலைமை போனால் முஸ்லீம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிவரும் என்ற தொனினிப்பட. ஒரு நீதியமைச்சர் அவ்வாறு கூற வேண்டி வந்திருக்கிறது.

முஸ்லிம்களின் பண்பாட்டு உரிமைகளில் ஒன்றாகிய இறந்தவர்களை அடக்கம் செய்யும் உரிமையை ஏற்றுக் கொள்ளாத ஒரு அரசாங்கத்தின் நீதி அமைச்சர் அவர். இந்த அரசாங்கத்தின் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் பெருமளவுக்கு சிங்கள பௌத்தர்களை திருப்திப்படுத்தும் நோக்கிலானவை. கோவிட்-19 நோயால் இறந்தவர்களின் உடல்களை உலகின் மிகப்பெரிய ஜன-நாயக நாடுகளில்கூட எரிக்கவில்லை. புதைக்கிறார்கள். உலகில் இவ்வாறு எரிக்கப்படும் தொகையை விடவும் புதைக்கப்படும் தொகையே அதி-கம்.ஆனால் இலங்கை அரசாங்கமோ முஸ்லிம்களை அவ்வாறு புதைக்க முடியாது என்று கூறுகிறது.ஒரு வைரஸ் தொற்றுக்காலத்தில் வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் ஒரு சிறிய தேசிய இனத்துக்கு எதிராக திருப்பியிருக்கிறது. இதனால் முஸ்லிம் மக்கள் முழுக்கமுழுக்க தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதன் விளைவாகவே தங்களை மோசமாக நடத்தும் ஓர் அரசாங்கத்துக்கு மேலும் அதிகாரத்தை குவிக்கும் 20ஆவது திருத்தத்துக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஆதரித்து வாக்களித்தார்கள். அது ஒரு மோசமான சரணாகதி. அப்படி சரணடைந்தது அரசாங்கத்தின் நன்மதிப்பைப் பெறலாமா நம்பிக்கையை வென்றெடுக்கலாமா என்று அவர்கள் முட்டாள்தனமாக சிந்தித்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

முடிவில் இம்மாத தொடக்கத்தில் பிறந்து 20 நாட்களேயான ஒரு குழந்தையைப் புதைக்கக் கூடாது என்று கூறி அரசாங்கம் எரித்தபோது முஸ்லிம்களின் கூட்டு உணர்வு அதற்கு எதிராகத் திரும்பியது. அங்கேயும் முதலில் எதிர்ப்பை காட்டியது சிங்கள முற்போக்கு சக்திகள்தான். கனத்தை மயானத்தின் மதிலில் அவர்கள் கபன் துணியைக் கட்டினார்கள். இவ்வாறு கபன் துணியைக் கட்டும் போராட்டம் மிக வேகமாக நாடு முழுவதும் விரிவடைந்தது.உடல்களை கட்டாயமாக தகனம் செய்வதற்கு எதிராக முதலில் எதிர்ப்பு காட்டியதும் சிலாபத்தை சேர்ந்த ஒரு சிங்கள கத்தோலிக்கத் தாய்தான். சவஅடக்க உரிமைக்காக போராடலாம் என்ற துணிச்சலான முதலாவது முன்னுதாரணம் அந்தத் தாய்தான்.

அதைத்தொடர்ந்து முஸ்லிம்கள் கபன் துணிகளை சிறு முடிச்சுகளாக கட்டத் தொடங்கினார்கள். அந்தச் சிறிய வெள்ளை துண்டுகளை யாரோ இரவுகளில் அகற்றி வருகிறார்கள். ஆனாலும் கோவிட்-19 சூழலுக்குள் மிகவும் படைப்புத் திறனோடு சிந்திக்கப்பட ஒரு போராட்டம் அது. தென்னாசியப் பிராந்தியத்தில் ஏற்கனவே இந்திய விவசாயிகள் வேளாண் மசோதாவுக்கு எதிராக டெல்லியில் போராடிக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் தமது சவஅடக்க உரிமைகளுக்காக கபன்துணிப் போராட்டத்தை தொடங்கியிருக்கிறார்கள். கபன் துணிப் போராட்டம் எனப்படுவது அரசாங்கத்தின் வெற்றிகள் பூமராங்காக திரும்ப தொடங்கியிருப்பதன் குறியீடு எனலாமா?

மேற்கண்டவற்றை தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரிகிறது யுத்த வெற்றிகளை அரசியல் வெற்றிகளாக மாற்றத் தயாரற்ற ராஜபக்சக்கள் அதன் விளைவுகளை ஜெனிவாவில் அறுவடை செய்யத் தொடங்கினார்கள். இனிமேலும் வரும் மார்ச் மாதம் அவர்கள் புதுப்பிக்கப்பட்ட விளைவுகளை அறுவடை செய்ய வேண்டியிருக்கும்.அதேபோல வைரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவர்களால் முழுமையாக வெற்றி பெற முடியவில்லை என்பது தெரியத் தொடங்கிவிட்டது.

ராஜபக்சக்களின் பலம் யுத்த வெற்றிதான். ஆனால் அதே சமயம் அவர்கள் அந்த வெற்றியின் கைதிகளும்கூட.அந்த வெற்றிகளைத் தாண்டி அவர்களால் சிந்திக்க முடியாது.மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கான தனிச் சிங்கள வாக்குகளுக்காக அவர்கள் உசுப்பி விட்ட பூதத்தை அடக்குவது கடினம். ஒருபுறம் கோவிட்-19 சூழலை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை. அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் பரவலான அதிருப்தி.இரண்டாவதாக கோவிட்-19 சூழலால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள்.

மூன்றாவதாக சீனசார்பு வெளியுறவுக் கொள்கையால் ஏற்பட்டிருக்கும் வெளியுறவு நெருக்கடிகள். இவை எல்லாவற்றையும் சமாளித்து கொண்டு இந்த ஆண்டை கடப்பது சவால் மிகுந்ததாகவே இருக்கும் என்பதைத்தான் மனோ கணேசன் “2021ஆம் ஆண்டு என்பது இந்த அரசின் அழிவின் ஆரம்பம்” என்று கூறினாரா?


காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA
100% REFUND IF VISA DENIED



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life | BMO Insurance

Are you getting Million Dollar advice?

# மாலத்தீவு சுதந்திர நாடா இல்லை சுடுகாடா?

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

தன்மானமுள்ள எந்த ஜனநாயக நாடும் இதுவரை செய்திராத அல்லது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஒரு முன்னெடுப்பை இலங்கை செய்துள்ளது பல நாடுகளை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

வெளிநாடுகளில் உயிரிழந்தவரின் சடலத்தைக் கூட தாய்நாட்டிற்குக் கொண்டுவந்து இறுதிக் கிரியைகளைச் செய்வதற்கு பல நாடுகளின் அரசுகள் தீவிர முயற்சிகளை எடுக்கின்றன. ஆனால் இலங்கை அரசோ தமது நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த முஸ்லிம்களைப் புதைக்க மாலத்தீவை அணுகியுள்ளது.

அப்படியான ஒரு முன்னெடுப்பு தனக்குத் தெரியாது என்று அமைச்சரும் அரசாங்கப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல கூறினாலும், மாலத்தீவு வெளியுறவு அமைச்சரின் ட்விட் இதை உறுதி செய்கிறது. இலங்கை ஜனாதிபதியின் வேண்டுகோளை தமது அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என்று மாலத்தீவின் வெளியுறவு அமைச்சர் அப்துலா ஷாஹித் டிவிட்டரில் தெரிவித்துள்ளார்.




உலகளவில் பல நாடுகள் தமது பொருட்களையும், தயாரிப்புகளையும் ஏற்றுமதி செய்து நாட்டுக்குப் பெருமை சேர்க்கின்றன. அவ்வகையில் இலங்கையும் தனது தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மூலம் நன்மதிப்பைப் பெற்றிருந்தது. ஆனால் தொடர்ந்து வந்த அரசுகள் - தங்களது உடம்பையே உரமாக்கி "சிலோன் டீ" எனும் அடையாளத்தை ஏற்படுத்திக் கொடுத்த - மலையகத் தோட்டத் தொழிலாளர்களை இன்றளவும் நவகாலனித்துவ அடிமைகளாக வைத்துள்ளனர் என்பது வேறு கதை. அதைப் பற்றி விரிவாக பின்னர் எழுதுவேன்.

தேயிலை மூலம் தனக்கென்று ஒரு இடத்தைப் பெற்றிருந்த இலங்கை அரசு தற்போது "உடல்களை ஏற்றுமதி" செய்ய விழைகிறது.

உலக சுகாதார நிறுவனம் சரியா-இலங்கை சரியா?

கொரோனா தொற்று காரணமாக உயிரிழப்பவர்களின் உடல்களைப் புதைப்பதன் மூலம் அந்த நோய்த் தொற்று பரவாது என்று உலக சுகாதார அமைப்பு உட்பட பல அமைப்புகள் கூறினாலும், அதை ஏற்க மறுத்த ராஜபக்ஷ அரசு தமது சொற்படி ஆடும் "சுயாதீனக் குழுவொன்றை" அமைத்து தமக்குச் சாதகமான அறிக்கையொன்றைப் பெற்று அதன்படி கோவிட்-19 காரணமாக மரணமடைந்தவர்களை - அதிலும் குறிப்பாக இஸ்லாமியர்களின் உடல்களைப் புதைக்க அனுமதிக்காமல் அவற்றைத் தகனம் செய்தே ஆகவேண்டும் என்று விடாப்பிடியாக உள்ளனர்.



சிறுபான்மையினர் மீது தொடர்ந்து வன்மத்துடன் நடந்துகொள்கிறது எனும் குற்றச்சாட்டுக்கு ஆளாகி வரும் இலங்கை அரசு தற்போது கொரோனா தொற்று காரணமாக உயிரிழக்கும் இஸ்லாமியர்களின் உடல்களை மாலத்தீவில் புதைக்க அந்நாட்டு அரசிடம் கோரி அதை மாலே அரசு ஏற்றுக் கொண்டுள்ளதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

எதன் அடிப்படையில் மாலத்தீவு அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது என்பதற்கு எவ்வித விளக்கமும் இல்லை. தன்மானமுள்ள நாடா எனும் கேள்வி மாலத்தீவுக்கும் இந்த விடயத்தில் பொருந்தும்.

மாலத்தீவு அரசுக்கு இஸ்லாமிய அமைப்புகள் கோரிக்கை

மாலத்தீவு அரசு இலங்கையின் வேண்டுகோளுக்கு அளித்த அனுமதியை மீளப் பெறவேண்டும் என்று பிரிட்டனிலுள்ள 18 முஸ்லிம் அமைப்புகள் கோரியுள்ளன.



ஐக்கிய இராச்சியத்திலுள்ள அந்த இலங்கை முஸ்லிம் அமைப்புகள் இதை வலியுறுத்தி லண்டனிலுள்ள மாலத்தீவு தூதருக்கு கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளனர்.

இலங்கை அரசுக்கு "ஜனாசாக்கள்" தொடர்பில் அளிக்கும் ஆதரவை மாலத்தீவு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அந்த அமைப்புகள் கோரியுள்ளன. மறைமுக செயல்திட்டம் ஒன்றுடன் இலங்கை அரசு செயல்படுகிறது, அது நாட்டிலுள்ள முஸ்லிம் மக்கள் மீது அரசியல் மற்றும் சமூக ரீதியில் பாரியத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர்களின் கடிதம் கூறுகிறது.

உலகின் முன்னணி இஸ்லாமிய நாடுகளான சவுதி அரேபியா, துருக்கி, பாகிஸ்தான், வங்கதேசம், இரான் போன்ற நாடுகளில் கூட கொரோனா தொற்று காரணமாக பலியானவர்களை இஸ்லாமிய மரபுகள் படி நல்லடக்கம் செய்கிறார்கள். எனவே நோய் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களைப் புதைத்தால் நிலம் மற்றும் நீரின் மூலம் அந்த நோய்க் கிருமி பரவும் எனும் இலங்கை அரசின் வாதம் அடிபட்டுப் போகிறது.

மாலத்தீவு அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில், பிரிட்டனின் முஸ்லிம் அமைப்புகள் "இறந்தவர்களை புதைக்க இந்த உபாயம் ஒரு வழியல்ல, அது அரசியல் யாப்பில் அளிக்கப்பட்டுள்ள உறுதிகளுக்கு முரணானது" என்று கூறியுள்ளனர்.

"அடிப்படை உரிமை மீறல்"

முறையான இஸ்லாமிய முறையிலான அடக்கத்திற்காக இலங்கை உயிரிழந்தவர்களின் சடலங்களை மாலத்தீவுக்கு அனுப்பும் பிரேரணையானது அப்பட்டமான அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்று அந்த 18 முஸ்லிம் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

"அப்படிச் செய்வதன் மூலம் இறந்தவர்களின் குடும்பத்தார் உயிரிழந்த நபருக்குச் செய்ய வேண்டிய மதரீதியிலான உரிமைகளை மறுப்பதாகும், மேலும் இறுதி கிரியைகளுக்குப் பிறகு அஞ்சலி செலுத்த அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்குச் செல்ல முடியாத சூழலை உருவாக்கும்" என்று கூறும் அந்த அமைப்புகள் இது முஸ்லிம்களுக்கு மீள முடியாத மனவுளைச்சலை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டியுள்ளன.

தற்போதுள்ள சூழலில் இறுதிக் கிரியைகளுக்காக ஒருவர் இலங்கையிலிருந்து மாலத்தீவுக்குச் சென்று வருவதும் இயலாத ஒன்று என்று அந்தக் கடிதம் கூறுகிறது "கடந்த பல ஆண்டுகளாகவே இலங்கையிலுள்ள கடும்போக்கு சிங்கள பௌத்த அமைப்புகள், உள்நாட்டு முஸ்லிம்களை "மண்ணின் மைந்தர்கள்" என ஏற்க மறுக்கின்றன". முஸ்லிம்களை "வந்தேறிகள்" என்று குற்றஞ்சாட்டும் சிங்கள பௌத்த அமைப்புகள் அரசின் ஆதரவுடன் சிறுபான்மையினரை அச்சுறுத்தி அவர்களின் மதச் சுதந்திரத்தை ஒடுக்கும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என நாள்தோறும் முழங்கும் பௌத்த அமைப்புகளும் அதனை வழிநடத்தும் குருமார்களும் அரசை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விழைகின்றன. அவர்களின் அழுத்தம் காரணமாக இலங்கையில் சிறுபான்மையினர் மீது "அரச பயங்கரவாதம்" கட்டவிழ்த்துவிடப்படுகிறது என்று தொடர்ச்சியாக அரசியல் அவதானிகள் கூறி வந்துள்ளனர். ஆனால் வழக்கம்போல தம்மீதான குற்றச்சாட்டை அரசு மறுக்கிறது.




ஒவ்வொரு காலகட்டத்திலும் ஏதோவொரு காரணத்திற்காக "பேரினவாத சக்திகள்" தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காக சுயலாப நோக்குடன் சிறுபான்மையினர் மீது நேரடி மற்றும் மறைமுகத் தாக்குதலை முன்னெடுத்து வருவது இலங்கையில் ஒரு சாபக்கேடாகவே உள்ளது என்று மனித உரிமை அமைப்புகளும், சமூக ஆர்வலர்களும் ஆதங்கப்படுகின்றனர்.

இலங்கையில் வெளிப்படையாக தம்மை சிங்கள பௌத்தர்கள் என்று அடையாளம் காட்டிக் கொள்பவர்கள் புத்த பகவானின் சிந்தனைகள் மற்றும் உபதேசங்களை வாசித்துள்ளனரா எனும் கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

கோவிட்-19 காரணமாக உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களைப் புதைக்க மாலத்தீவை வேண்டியுள்ள அரசு, இந்து மற்றும் கிறிஸ்தவர்கள் இந்தக் கொடிய நோயினால் மரணமடைய நேர்ந்தால் என்ன செய்வார்கள்? இந்தியாவிடமும் இதர மேற்குலக கிறிஸ்தவ தேசங்களிடமும் இறந்த எமது பிரஜைகளை நல்லடக்கம் செய்ய உங்கள் நாடுகளில் இடம் கொடுங்கள் என்று கேட்க முடியுமா? அப்படியே கேட்டாலும் அந்த நாடுகள் எப்படியான பதிலளிக்கும் என்பதை நாம் அறிவோம்.

மாலத்தீவும் ஒரு முஸ்லிம் நாடு. அந்நாட்டில் கொரோனா தொற்றின் காரணமாக இறந்தவர்களைப் புதைக்க முடியுமென்றால் ஏன் இலங்கையிலேயே அவர்களைப் புதைக்க முடியாது? இப்படி ஏராளமான கேள்விகள் இருந்தாலும், இலங்கை அரசிடமிருந்து எந்தவொரு பதிலும் இதுவரை இல்லை.

இலங்கை நாடாளுமன்றத்திலுள்ள முஸ்லிம் கட்சிகள் அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சிகளால் ஏதும் காத்திரமான தமது சமூகத்துக்கு செய்ய முடியவில்லை. அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களில் கணிசமானவர்கள் அரசின் பக்கம் தாவி விட்டனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்களுக்கு தமது இருப்பையும் கட்சியைக் காப்பாற்றுவதுமே பெரும் சவாலாக இருக்கிறது. பெயரளவுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதைவிட அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.




நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கு தமது அடிப்படை மதவுரிமைகள் பறிக்கப்படுகின்றன என்று நாடாளுமன்றத்திலுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் மற்றும் மாநகர சபைகளின் பிரதிநிதிகளும் குரல் கொடுக்கின்றனர். "ஜனாசாக்களை" புதைப்பதற்கு பதிலாக எரிக்க வேண்டும் என்று கூறும் அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஏன் அனைவரும் ஒட்டுமொத்தமாகப் பதவி விலகி அழுத்தம் கொடுக்கக் கூடாது? அதற்கு யாரும் பதில் சொல்வதற்குத் தயாராக இல்லை. அவர்கள் பிரச்சனை அவர்களுக்கு. பழிவாங்கும் அரசிடன் பணிந்து செல்வதே மேல் என்று அவர்கள் நினைக்கக் கூடும்.

இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்கள் நெருக்கடியான சூழலை எதிர்கொள்ளும் போது அவர்களுக்குத் தமிழ் மக்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது ஆறுதலாகவுள்ளது. வடக்கு கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் நடைபெற்ற அமைதியான போராட்டத்தில் தமிழ், முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மக்களும் மத குருமார்களும் பங்கு பெற்றனர்.

நிறைவாக ஒரு கேள்வி. அரசின் உயர் பதவி அல்லது அமைச்சரவையில் இருக்கும் முஸ்லிம்கள் யாரேனும் துரதிருஷ்டவசமாக கொரோனா காரணமாக உயிரிழக்க நேர்ந்தால் அவர்களின் இறுதிக் கிரியைகள் இலங்கையில் நடக்குமா அல்லது அவர்களது ஜனசாக்களும் மாலத்தீவுக்கு ஏற்றுமதி செய்யப்படுமா?

# போதிய தன்னார்வலர்கள் முன்வரவில்லை இந்தியாவின் 'கோவாக்சீன்' தடுப்பூசி பரிசோதனை தாமதம்

**கோ**விட்-19 எனப்படும் கொரோனா பெருந்தொற்றுப் பரவலை அழித்தொழிக்கும் தடுப்பூசிகள், அடுத்தடுத்து பயன்பாட்டுக்கு வந்து கொண்டு இருக்கின்றன.




முதல் முதலாக, ரஷியாவின் ஸ்புட்னிக்-வி தடுப்பூசி கடந்த 5-ந்தேதி முதல் மாஸ்கோவில் பயன்பாட்டுக்கு வந்தது.

அடுத்த சில நாட்களிலேயே, பைசர் நிறுவனத்தின் தடுப்பூசியை செலுத்தும் பணி, இங்கிலாந்தில் தொடங்கியது.

அடுத்து, தடுப்பூசியை பொதுமக்களுக்கு வழங்கும் 3-வது நாடு என்ற பட்டியலில் அமெரிக்கா இடம் பிடித்தது. அங்கும் முதல் கட்டமாக பைசர் தடுப்பூசி தான் போடப்பட்டு வருகிறது. அடுத்தபடியாக, மாடர்னா நிறுவனத்தின் தடுப்பூசிக்கும் அனுமதி வழங்குமாறு, அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அமைப்பிடம் கோரப்பட்டுள்ளது. இந்த அனுமதியும் கிடைத்தவுடன், அமெரிக்காவில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்னும் வேகம் எடுக்கத்தொடங்கி விடும்.

இந்தியாவைப்பொருத்தமட்டில், பைசர் நிறுவனம் இந்திய மருந்துக்கட்டுப்பாட்டு அமைப்பிடம் ஏற்கனவே அனுமதி கேட்டுள்ளது.

அதோடு, இங்கிலாந்தின் கோவிஷீல்டு, ரஷியாவின் ஸ்புட்னிக்-வி ஆகிய தடுப்பு மருந்துகள் இறுதிக்கட்ட பரிசோதனை நிலையிலும், உற்பத்தி நிலையிலும் உள்ளன.

இவை போக, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் (ஐ.சி. எம்.ஆர்) உடன் இணைந்து பாரத் பயோடெக் நிறுவனம் உள்நாட்டிலேயே உருவாக்கியுள்ள, கோவாக்சின் தடுப்பூசியின் மூன்றாம் கட்ட பரிசோதனையும் தொடங்கி நடந்து வருகிறது.

ஆனால் இப்பரிசோதனைக்கு தன்னார்வலர்கள் போதிய அளவில் கிடைக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

கோவாக்சின் தடுப்பூசியின் இறுதிக்கட்ட பரிசோதனைக்கு சுமார் 1,500 தன்னார்வலர்கள் தேவை. ஆனால் இதுவரை 200 பேர் மட்டுமே தன்னார்வலராக ஊசி போட்டுக்கொள்ள முன்வந்துள்ளனர்.

## தன்னார்வலர்கள் குறைவுக்கு காரணம் இதுதான்

இதுபற்றி, டெல்லி எய்ம்ஸ் மருத்துமனையின் சமூக மருத்துவப்பிரிவு பேராசிரியரும், முதன்மை ஆய்வாளருமான டாக்டர் சஞ்சய் ராய் கூறும்போது, ”நாங்கள் 1,500 முதல் 2,000 பங்கேற்பாளர்களை விரும்பினோம், ஆனால் இதுவரை சுமார் 200 பங்கேற்பாளர்கள் மட்டுமே கிடைத்துள்ளனர். அனைவருக்கும் தடுப்பூசி விரைவில் கிடைக்கும்போது, நாங்கள் ஏன் ஒரு சோதனையில் பங்கேற்க வேண்டும் என்று நினைத்து மக்கள் இந்த பரிசோதனையில் பங்கேற்க விரும்பவில்லை” என்று தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:- ”கோவாக்சினின் முதல்கட்ட சோதனை தொடங்கும்போது, எங்களுக்கு 100 பங்கேற்பாளர்கள் தேவையிருந்தது. ஆனால் 4,500க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றோம்.

இரண்டாம் கட்ட சோதனையின் போது கூட, மருத்துவமனைக்கு சுமார் 4,000 விண்ணப்பங்கள் வந்தன. ஆனால் 3-வது கட்ட சோதனைக்கு தன்னார்வலர்கள் வருவது குறைந்து விட்டது. பிற நாடுகளில் தடுப்பூசி பயன்பாடு தொடங்கி விட்டதால் ஒட்டு மொத்தமாகவே தடுப்பூசி கிடைத்து விட்டதாக நினைத்து, நாம் ஏன் பரிசோதனை முயற்சியில் பங்கேற்கவேண்டும் என்று நினைப்பது தான் இதற்கு காரணம். ஆனால் நூற்றுக்கணக்கான கோடி மக்களின் தடுப்பூசி தேவைகளை ஓரிரு நிறுவனங்களின் தயாரிப்புகளைக்கொண்டு சமாளித்து விடமுடியாது.

எனவே, தடுப்பூசி பரிசோதனையில் பங்கேற்க மக்கள் முன்வர வேண்டும் என்றும், பாதுகாப்பான, பயனுள்ள தடுப்பூசி பெற மருத்துவ பரிசோதனையில் பங்கேற்பது எந்த அளவு முக்கியம் என்பது குறித்தும் விளம்பரங்கள், மின்னஞ்சல்கள், தொலைபேசி அழைப்புகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். எப்படியும், இம்மாத இறுதிக்குள் பரிசோதனைகளை முடித்து விடலாம் என நம்புகிறோம்”. இவ்வாறு டாக்டர் ராய் கூறினார்.



முழுக்க முழுக்க இந்தியாவில் தயாராகும் கோவாக்சின் தடுப்பூசியின் இறுதிக்கட்ட பரிசோதனை, போதிய தன்னார்வலர்கள் இன்றி தாமதம் ஆவதால், பைசர் நிறுவனத்தின் தடுப்பூசி அல்லது இங்கிலாந்தின் கோவிஷீல்டு தடுப்பூசி முதலில் இந்தியாவில் பயன்பாட்டுக்கு வர வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது. தடுப்பூசி எதுவாயினும், மக்களின் அச்சம் நீங்கவேண்டும். அதற்கு, பைசர், கோவிஷீல்டு, கோவாக்சின் என எதுவாக இருந்தாலும் சரிதான். வருவது விரைவில் வரட்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

***மணிராஜ்,***
***திருநெல்வேலி.***



# தமிழ் அரசியல் கைதிகளுக்கு என்னவாயிற்று? அரசுக்கு இராதாகிருஷ்ணன் கேள்வி

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

இலங்கையில் நீண்ட நாட்களாக விடுவிக்கப்படாமல் இருக்கும் அரசியல் கைதிகளுக்கு என்னவாயிற்று என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

போர் முடிந்து பத்தாண்டுகளுக்கு மேலான நிலையிலும் தொடர்ச்சியாக வந்த அரசுகள் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க உளசுத்தியுடன் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆனால் தற்போது அமைச்சர் உதய கம்மன்பில இலங்கையில் அரசியல் கைதி என்று எவரும் இல்லை என்று கூறியுள்ளார். இது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அதிர்வலைகளை எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன் செய்தியாளர்கள் சந்திப்பில் கேள்வி எழுப்பியுள்ளார். அவரது தெரிவித்த கருத்துக்களை இந்தக் காணொளியில் காணலாம்.

# யாழ். மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் பதவி இழந்தார். தடுமாறும் நிலையில் கூட்டமைப்பு

யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளராக இம்மானுவேல் ஆர்னோல்ட்டைத் தவிர வேறு ஒருவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிறுத்தினால் ஆதரிக்கத் தயாரென தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அத்தோடு, நல்லூர் பிரதேச சபைக்கும் புதிய வேட்பாளரை நியமித்தால் அவரையும் ஆதரிக்கத் தயாராக இருப்பதாக முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.


அவர் தெரிவிக்கையில், □யாழ். மாநகர சபை முதல்வருக்கு இ.ஆர்னோல்ட்டை தவிர இன்னொருவரையும், நல்லூர் பிரதேச சபையின் தவிசாளருக்கு தியாகமூர்த்தி தவிர்ந்த இன்னொருவரையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக அறிவித்தால் அவர்களை ஆதரிக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணி தயாராக இருக்கிறது.



அதேநேரம், இரண்டு சபைகளிலும் பதவி விலகிய ஆர்னோல்ட், தியாகமூர்த்தி இருவரையுமே வேட்பாளர்களாக நிறுத்தினால் எமது கட்சி அவர்களை எதிர்க்கும்.

அதேநேரம், எமது எதிர்ப்பையும் மீறி அவர்கள் வெற்றிபெற்று ஆட்சியமைத்தாலும் அவர்கள் சமர்ப்பிக்கும் வரவு செலவுத் திட்டத்தையும் எதிர்ப்போம்.

இதன்மூலம், இரண்டு சபைகளும் கலையும் நிலைமை ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பே ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# தலைவர் பிரபாகரனின் ஒளிப்படம் மற்றும் சொற்களை வெளியிட்டதாக யாழ்ப்பாண 'உதயன்' மீது வழக்கு

இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பு என்று கோட்டாபாய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினுடைய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்த நாளன்று அவரது ஒளிப்படத்தையும் சொற்களையும் வெளியிட்டமை தொடர்பில் யாழ் பிராந்தியப் பத்திரிகையான ''உதயன்'' மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் டிசெம்பர் மாத ஆரம்பத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கு மார்ச் 21ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாளான நவம்பர் 26ஆம் திகதி அவரது ஒளிப்படைத்தையும் சொற்களையும் பயன்படுத்தி பத்திரிகையில் வெளியிட்டமை 1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு உள்பட்டு தண்டனைக்குரிய குற்றம் புரியப்பட்டுள்ளது என அவ் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதனால் சந்தேக நபர் தொடர்பில் மன்றுக்கு அறிக்கையிடப்படும் என்றும் பொலிஸார் சமர்ப்பணம் செய்துள்ளனர்.

ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம்

அனைவருக்கும் எமது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.



நித்திய பூசைகள்
இடம்பெறுகின்றன.

3021 Markham Rd, Unit 45,46 & 47
Scarborough, Ontario M1X 1L8
Tel.No: (416) 293-1226

ஆலயத்தில் பிரதி தினமும் செவ்வாய்க்கிழமைகளில் கட்டணமில்லாமல் இலவசமாக எலுமிச்சம் பழ விளக்கேற்றி அம்பாளை கூட்டு வழிபாடு செய்யும் நிகழ்ச்சி கடந்த 17 ஆண்டுகளாக நடைபெறுகிறது என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.

குறிப்பு: ஐயா அவர்களால் சாதகம், பொருத்தம் பார்த்தல், பொதுப்பலன் சொல்லுதல், வியாபார விருத்தி, சாந்தி பரிகாரம் அனைத்தும் ஒழுங்கு செய்யப்படும்.

பிரம்மஸ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்
ஆலய நிர்வாகம்

# இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!









# தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்த அரசு அனுமதி: 300 வீரர்கள் மற்றும் 50 சதவீத பார்வையாளர்கள் பங்கேற்கலாம் என அறிவுறுத்தல்

ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு மற்றும் வடமாடு நிகழ்ச்சிகளில் மாடுபிடி வீரர்கள் 300 நபர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது. ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு மற்றும் வடமாடு நிகழ்ச்சிகளில் மாடுபிடி வீரர்கள் 300 நபர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தமிழகத்தில் கடந்த மார்ச் மாதம் முதல் ஊரடங்கு அமலில் உள்ளது.

ஜூலை மாதத்துக்கு பிறகு ஊரடங்கு கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்பட்டது. மக்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்கவும், பொருளாதார மேம்பாட்டை கருத்தில் கொண்டும் அத்தியாவசிய பணிகள் அனைத்துக்கும் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.தமிழகத்தில் மருத்துவ நிபுணர்களின் வழி காட்டுதலுடன் அரசு மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் காரணமாக தற்போது கொரோனா பரவல் 90 சதவீதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் இயல்பு நிலை திரும்பி உள்ளது.

என்றாலும் பொது இடங்களில் மக்கள் கூடும்போது எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டு வருகிறார்கள். அதிகளவில் மக்கள் திரளும் நிகழ்ச்சிகளுக்கு அரசு அனுமதி பெற வேண்டிய கட்டாய நிலை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இங்கிலாந்தில் புதிய வகை கொரோனா வைரஸ் பரவி மிகப்பெரிய அச்சத்தை ஏற்படுத்தி இருப்பதால் தொடர்ந்து தமிழக அரசு தீவிர கண்காணிப்பை மேற்கொண்டுள்ளது. மீண்டும் கொரோனா வந்து விடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு தடை விதித்துள்ளது.

புத்தாண்டை தொடர்ந்து பொங்கல் பண்டிகை வர உள்ளது. அந்த சமயத்தில்



தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி மிக கோலாகலமாக நடத்தப்படும்.இந்த ஆண்டு கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஜல்லிக்கட்டு போட்டிக்கு தமிழக அரசு அனுமதி வழங்குமா? என்பதில் கேள்வி குறி நிலவி வந்தது. ஜல்லிக்கட்டு போட்டிக்கான மாடுகளை தயார் செய்து வருபவர்களும், மாடுபிடி வீரர்களும் இது தொடர்பாக மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர்.இந்த நிலையில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கு சில நிபந்தனைகளுடன் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசுவெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

ஜல்லிக்கட்டு விளையாட்டின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்க, தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொரு வருடமும் தை மாதத்திலிருந்து அந்த வீர விளையாட்டில் பெருமளவு மகிழ்ச்சியோடு பங்கு பெற்று வருகின்றனர். நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, 2017 முதல் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டு வருகிறது.

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி என்பது காளைகள் மற்றும் மாடு பிடிப்பவர்கள் நேரடியாக கலந்து கொள்வது மட்டும் அல்லாமல், பொது மக்களும் பங்கேற்கும் நிகழ்ச்சியாகும். ஏற்கனவே ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு வெளியிடப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளுடன், தற்போது கோவிட்19 பெருந்தொற்று காரணமாக, எதிர்வரும் 2021ம் ஆண்டில், ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி நடத்த கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளுடன் அரசு அனுமதி அளிக்கிறது.

ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு மற்றும் வடமாடு நிகழ்ச்சிகளில் மாடுபிடி வீரர்கள் 300 நபர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.எருது விடும் நிகழ்ச்சியில் 150 வீரர்களுக்கு மிகாமல் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடத்த அனுமதிக்கப்படுகிறது.மேற்கண்ட நிகழ்ச்சிகளில் திறந்த வெளியின் அளவிற்கேற்ப (மொத்த அளவு) சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில், அதிகபட்சம் 50 சதவிகித அளவிற்கு மிகாமல் பார்வையாளர்கள் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது. பார்வையாளர்கள் வெப்ப பரிசோதனை (தெர்மல் சோதனை) செய்த பிறகே அனுமதிக்கப்படுவார்கள்.

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியில் மாடுபிடி வீரர்களாக பங்கேற்பவர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பரிசோதனைக்கூடத்தில் கோவிட்19 தொற்று இல்லை எனசான்று பெற்றிருக்க வேண்டும்.மேலும், நிகழ்ச்சியில் பார்வையாளர்களாக பங்கேற்கும் அனைவரும் முக கவசம் அணிவதும், தனிமனித இடைவெளியை கடைபிடிப்பதும் கட்டாயமாக்கப்படுகிறது.இதற்கான விரிவான, நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் தனியாக வெளியிடப்படும்.இவ்வாறு அதில் கூறப்பட் டுள்ளது.

# வாரம் ஒருமுறை பேரறிவாளனைச் சந்திக்க அற்புதம்மாளுக்கு அனுமதி: சென்னை உயர் நீதிமன்றம்



பேரறிவாளனைச் சந்திக்க அற்புதம்மாளுக்கும், உறவினர்களுக்கும் அனுமதி வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஜன.19 வரை வாரம் ஒருமுறை பேரறிவாளனைச் சந்திக்க அவரது தாயார் அற்புதம்மாளுக்கு உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று புழல் சிறையில் பேரறிவாளன் அடைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் உடல் நலம் சரியில்லாமல் பரோலில் வெளியில் வந்த பேரறிவாளன், கடந்த 7ம் தேதி மீண்டும் சிறைக்குச் சென்றார். பேரறிவாளனைச் சந்திக்க அற்புதம்மாளுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் அனுமதி வழங்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், டி.கிருஷ்ணகுமார் அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது பேரறிவாளன் தாயார் அற்புதம்மாள் மற்றும் உறவினர்களைச் சந்திக்க அனுமதிக்க வேண்டும் என ஆட்கொணர்வு மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டது. வழக்கில் பதிலளித்த சிறைத்துறை, கரோனா காலம் என்பதால் பேரறிவாளனின் நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரைக் காணொலிக் காட்சி வாயிலாகச் சந்திக்க அனுமதிக்க முடியும்.

ஆனால், பேரறிவாளனின் வழக்கறிஞர் எனக்கூறி பலர் கும்பலாகச் சந்திக்க வருகின்றனர், இதனால் தொற்று அதிகரிக்கவே வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.இதையடுத்து இந்த வழக்கில் நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், டி.கிருஷ்ணகுமார் அமர்வு, “உறவினர்கள், நண்பர்களைக் காணொலிக் காட்சி வாயிலாக அனுமதிக்க வேண்டும். வழக்கறிஞர்களைப் பொறுத்தவரை அவர்கள் பெயர்ப் பட்டியலைச் சிறை நிர்வாகத்திடம் கொடுக்கும் பட்சத்தில் அதில் யாரை அனுமதிப்பது என்பதை சிறை சூப்பிரண்டு முடிவெடுக்க வேண்டும்.

அற்புதம்மாளைப் பொறுத்தவரை தனக்கு கரோனா தொற்று இல்லை என்பதைப் பரிசோதித்து மருத்துவச் சான்றிதழை அவர் சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி ஜனவரி 19 வரை வாரம் ஒருமுறை அவரை அனுமதிக்க வேண்டும்” எனச் சிறைத்துறைக்கு உத்தரவிட்டது.

# பிரதமர் மோடிக்கு ‘தி லீஜியன் ஆஃப் மெரிட்’ விருது: இந்திய அமெரிக்க உறவுகளை மேம்படுத்த எடுத்த முயற்சிக்கு அதிபர் ட்ரம்ப் மரியாதை



இந்திய அமெரிக்க உறவுகளை மேம்படுத்த எடுத்த முயற்சிக்கு மரியாதை அளிக்கும் விதத்தில், அமெரிக்க ராணுவத்தில் வழங்கப்படும் மிக உயர்ந்த ‘தி லீஜியன் ஆஃப் மெரிட்’ விருதை பிரதமர் மோடிக்கு வழங்கி அதிபர் ட்ரம்ப் கவுரவித்துள்ளார்.இந்த விருதைப் பிரதமர் மோடியின் சார்பில் இந்தியத் தூதர் சரண்ஜித் சிங் சாந்து பெற்றுக்கொண்டார்.இந்தியாவின் பிரதமராக மோடி கடந்த 2014 மே மாதம் முதல் 2020 ஆகஸ்ட் வரை பல போற்றத்தக்குந்த சேவைகளைச் செய்துள்ளார்.

பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வையும், தலைமையும் இந்தியாவை உலகின் மிகப்பெரிய சக்தியாக மாற்றியுள்ளது. உலக அளவிலான சவால்களை எதிர்கொள்ள இந்திய அமெரிக்க உறவிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளார் என அமெரிக்க அரசு மோடியைப் பாராட்டியுள்ளது. அமெரிக்க ராணுவத்தால் வழங்கப்படும் இந்த உயரிய விருது தனக்கு அறிவிக்கப்பட்டதற்குப் பிரதமர் மோடி ட்விட்டரில் நன்றி தெரிவித்துள்ளார். அவர் பதிவிட்ட கருத்தில், “அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எனக்கு ‘தி லீஜியன் ஆஃப் மெரிட்’ விருது அறிவித்ததை நினைத்து நான் மிகுந்த பெருமைப்படுகிறேன்.

இது, இந்திய அமெரிக்க மக்களுக்கு இடையிலான உறவுகளையும், இரு நாட்டு ராஜாங்கரீதியான உறவுகளையும் மேம்படுத்தியதற்கான முயற்சிகளுக்குக் கிடைத்த அங்கீகாரம்.21ம் நூற்றாண்டு எப்போதுமில்லாத சவால்களையும், வாய்ப்புகளையும் வழங்கியது. ஒட்டுமொத்த மனிதகுலத்தின் நலனுக்கான உலகத் தலைமையை வழங்க, இந்திய அமெரிக்க உறவு, நம்முடைய மக்களின் பரந்த தனித்துவமான வலிமையை உயர்த்தும்.இந்திய அமெரிக்க உறவை மேலும் வலுப்படுத்த, என்னுடைய அரசு உறுதியாகவும், கடப்பாடுடனும் அமெரிக்க அரசுடனும், இருநாட்டு அதிகாரிகளுடனும் தொடர்ந்து பணியாற்றும் என்பதை நான் 130 கோடி மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராபர்ட் ஓ பிரையன் வழங்கிய இந்த விருதை பிரதமர் மோடியின் சார்பில் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் தரன்ஜித் சிங் சாந்து பெற்றுக்கொண்டார்.’தி லீஜியன் ஆஃப் மெரிட்’ விருது கடந்த 1942ம் ஆண்டு ஜூலை 20ம் தேதி முதல் அமெரிக்கப் பாதுகாப்புத் துறையால், அமெரிக்க ராணுவம், வெளிநாட்டு ராணுவத்தினர், அரசியல் தலைவர்கள் ஆகியோர் செய்த சிறப்பான பணிகள், சேவைகள், சாதனைகளைப் பாராட்டி வழங்கப்படும் உயரிய விருதாகும். வெளிநாட்டினருக்கு அமெரிக்காவால் வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றாகும்.கடந்த செப்டம்பர் மாதம் குவைத் மன்னராகத் திகழ்ந்த அமீர் ஷேக் ஷபாப் அல் அகமது அல் ஜபார் அல் ஷபாப்புக்கு இந்த விருதை அதிபர் ட்ரம்ப் நீண்டகாலத்துக்குப் பின் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.


#9 SALES REPRESENTTATIVE IN CANADA
FOUNDER'S CLUB MEMBER
HOMELIFE #1 TOP PRODUCER 2019
HOMELIFE #1 TOP PRODUCER 2020
1000000
DOLLAR PRODUCER AWARD
HOMELIFE
HIGHER STANDARDS
WE APPRECIATE YOUR CONTINUED SUPPORT AND LOOK FORWARD TO GROWING
Merry Christmas
எமது வெற்றியின்
பங்காளிகளான வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்களும் நன்றிகளும்
Abi Amalan
Real Estate Broker
416.732.1810
REAL ESTATE TEAM
Amal Ganeshamoorthy
Broker of Record
416.829.9993
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE | HOMELIFE FUTURE AMAL-ABI REALTY INC., BROKERAGE
(905) 201-9977 | 7 Eastvale Dr #205, Markham, ON L3S 4N8

# MORTGAGES & LOANS

**Residential / Commercial / Industrial / Investment Properties**

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,
உறவினர் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும்
நத்தார் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்சியுடன்
தெரிவித்துக் கொள்கின்றோம்!

## MERRY CHRISTMAS & HAPPY NEW YEAR



## T.NESAN

*Subra*

**416-660-5656**

Off: 416-660-5656 | Fax: 647-351-3099
Toll Free: 1-844-878-2721
mortgage@nesan.ca | www.nesan.ca

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance, Renewal & Switches
- Multi Rental Properties
- Personal & Business Equity Line of Credit
- Truck, Personal & Business Equity Loans

Our Office:
1585 Markham Rd, Unit #406,
Toronto, M1B 2W1, Canada
Mortgage Alliance
Brokerage # 10530

SUBRA MORTGAGE SOLUTIONS

Powered by MORTGAGE ALLIANCE

**WE DEAL WITH ALL BANKS**

Brokerage # 10330

TD Canada Trust · Scotiabank · Street Capital Bank of Canada · radius financial · First National Financial LP · Equitable Bank · Home Trust · RMG mortgages · MCAP




**என்னிடம் நீண்டகால கிரடிட் எதுவும் இல்லை.
நான் Mastercard® வகை கிரடிட் காட்டுகளுக்கு
விண்ணப்பிக்க முடியுமா?**

உங்களிடம் கிரடிட் இல்லையா? அதற்கு எம்மிடம் தீர்வு உள்ளது*

தெரிவு செய்யப்பட்ட வங்கிகளில் உள்ள எங்கள் மொழி ஆலோசர்கள் உரையாடுவார்கள் அல்லது வாடிக்கையாளர்களுக்கான எங்கள் சலுகைகளை இணையத்தில் தேடுங்கள்

உங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்க நாங்கள் இருக்கின்றோம்

**nbc.ca**/tamil

*Our banking offer for newcomers is available to immigrants who have been living in Canada for less than 5 years. Security deposit may be required under certain circumstances. Some conditions apply.® Mastercard is a registered trademark of Mastercard International Incorporated. Authorized user: National Bank.


கனடா உதயன் வாசகர் வட்டம் நடத்தும்
2020ம் ஆண்டிற்கு விடைகொடுக்கும் இணையவழிக்
கவியரங்கம்
ஏழு கவிஞர்கள் பல நாடுகளிலிருந்து கலந்து கொள்கின்றார்கள்
கவியரங்கத் தலைப்பு:- எதைக் கொண்டு வருகின்றாய் இனிய புத்தாண்டே?
கணபதி ரவீந்திரன் (கனடா)
அருட்கவி ஞான கணேசன் (கனடா)
அ. தமிழரசி (தமிழ்நாடு)
மகேந்திரன் பெரியசாமி (அமெரிக்கா)
பிரவீணா (சுவிஸ்)
கோவிலூர் செல்வராஜா (இங்கிலாந்து)
ஜவாத் மரைக்கார் (இலங்கை)
காலம் 26-12-2020 சனிக்கிழமை
கனடா, அமெரிக்கா நேரம்:- காலை 9.00 மணி
இலங்கை, இந்திய நேரம்:- இரவு 7.30 மணி
இலண்டன் நேரம்:- மாலை 2.00 மணி
ஐரோப்பிய நேரம்:- மாலை 3.00 மணி
கவியரங்கை அங்குரார்ப்பணம் செய்பவர்:- கவிஞர் குயின்ரஸ் துரைசிங்கம் (கனடா)
கவிதா வாழ்த்து நிகழ்த்துபவர் எழுத்தாளர் வீணைமைந்தன் சண்முகராஜா (கனடா)
Join Zoom Meeting
https://us02web.zoom.us/j/87143269785?pwd=QIJ0LzIrd0IJUkRabHVsQk41dzRWZz09
Meeting ID: 871 4326 9785
Passcode: 863268
மேலதிக விபரங்களிற்கு:-1416 732 1608


Canada VISA
கூடிய விரைவில் உங்கள் கைகளில்
இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்கள்
CANADAவிற்கு அழைத்து வர எம்மை நாடுங்கள்
STUDENT VISA
ஏற்பாடுகளை இலகுவான முறையில் விரைவில் செய்து தருபவர்கள்.
TOURIST VISA
தனியாகவோ, குடும்பத்தினருடனோ உல்லாசமாக வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.
VISIT VISA
பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.
REFUSED VISA
உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.
BUSINESS VISA
உங்கள் வர்த்தகத்தினை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.
10 வருட கால நம்பிக்கையான சேவை
flex Institute
Step Towards a Bright Future
6A, Parakumba Place, Colombo 06, Sri Lanka.
www.flexinstitute.lk Flex Institute
flexinstitute04@gmail.com
Hotline: +94 777-761 346
P. Jegan
Director - Flex Institute
+94 777 761 346
P. Vijay
Director - Flex Institute
+94 777 555 026

- மொன்றியல் வீணைமைந்தன் எழுதுகின்றார்

# #26 சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

"மக்கள் திலகம்" எம்.ஜிஆர் அவர்களின் 33வது நினைவு நாள் டிசம்பர் 24ம் திகதி என்ற நினைவு என் மனதில் எழுந்ததும் அப்பெரியவரும் நடிகர் திலகம் சிவாஜி ஐயாவும் கலையுலகில் இணந்து செயல் ஆற்றிய சம்பவங்களையும் - அவர்கள் இருவரும் சேர்ந்து நடித்த ஒரே படமான ஆர். ஆர். பிக்சர்ஸ் உரிமையாளர் டி. ஆர். ராமண்ணா அவர்கள் தயாரித்து இயக்கிய "கூண்டுக்கிளி" படம் பற்றியும் எழுதி இருபெரும் திலகங்களுக்கும் மரியாதை செய்யும் நோக்குடன் இவ்வாரக் கட்டுரையை எழுதுகிறேன்.

"மக்கள் திலகமும்", "நடிகர் திலகமும்" நாடகப் பட்டறைகளிலேயே பட்டை தீட்டப்பட்டவர்கள். இதில் "மக்கள் திலகம்" எங்கள் நாடாகிய இலங்கையில் பிறந்தவர் என்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சி. இலங்கை தேசத்தின் மத்தியப்பிரதேசமான மலையகக் காற்றையே அவர் சிசுவாகவிருந்த போது சுவாசித்தவர். எமது மண்ணின் தண்ணீரையே தாய்ப்பாலாகப் பருகி வளர்ந்தவர். அதுவே அவருக்குத் தமிழ்ப்பால் அருந்தி தமிழகத்தில் வாழ வழி வகுத்தது!

சரி இனி சினிமா உலகிற்குள் செல்வோம். நாடகப் பள்ளிகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதும் தொடரும் வறுமையை விரட்டியடிக்க சினிமா ஸ்டுடியோக்களைச் சுற்றி சுற்றி வலம் வந்தார். பகீரதப் பிரயத்தனங்களுக்குப்பின் முதன்முதலில் 1936ம் ஆண்டு "சதிலீலாவதி" படத்தின் மூலம் அறிமுகமாகிறார். "நடிகர் திலகம்" ஒரே நாளில் "பராசக்தி" மூலம் இமயத்தை தொட்டது போல் இவரது முதல் படம் இவரை திரையுலகின் உச்சாணிக் கிளையில் கொண்டுபோய் அமர்த்தவில்லை.

கஜினிமுகமது தோல்வியை கண்டு துவளாது மீண்டும் மீண்டும் படையெடுத்து வெற்றிக்கனியைப் பறித்தது போல் கலைஞர் மு. கருணாநிதியாரின் நட்பை மூலதனமாக்கி "ராஜகுமாரி" "அபிமன்யூ" "மருதநாட்டு இளவரசி" "மந்திரிகுமாரி" என மு.கவின் முத்தான உரைவீச்சுகளும் காட்சி அமைப்புக்களும் எம்.ஜி ராமச்சந்திரன் என்ற நடிகரை "புரட்சி நடிகர்" ஆக்கியது! 1936 லிருந்து 1953ல் வெளியான "ஜெனோவா" படம் வரை சுமார் 23 படங்களிலேயே "மக்கள் திலகம்" தோன்றினார். ஏறக்குறைய 17 ஆண்டுகளுக்குப் பின்னரே "மலைக்கள்ளன்" படம் 1954ல் வெளியான பின் திரயுலகில் அவருக்கு நிலையான புகழ் உதயமாயிற்று.



தமிழகத்தின் தமிழ்ப்புலவர்களில் புகழடைந்தவராகிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் ஐயாவின் நாவலாகிய "மலைக்கள்ளன்" நாயகனாக நடிப்பதற்குத் தயாரிப்பு நிறுவனமான "பட்சி ராஜா பிக்சர்ஸ்" அதிபர் ஸ்ரீ எஸ். எம் ராமுலு நாயுடு அவர்கள் நாடியது சிவாஜி அவர்களையே என்பது பலருக்குத் தெரியாத உண்மை! 1954ல் "மனோகரா" தமிழ் தெலுங்கு, இந்தி உட்பட சுமார் பத்து படங்களில் ஒப்பந்தம் ஆகியிருந்தார் சிவாஜி அவர்கள். அதனால் அவரால் "மலைக்கள்ளன்" படத்தில் நடிக்க ஒப்புதல் வழங்கவில்லை. ஆனால் தயாரிப்பாளரை அண்ணன் எம்.ஜி.ஆரிடம் போய் இந்தப் படத்தை ஒப்பந்தம் செய்யுங்கள் என வற்புறுத்தியவர் சிவாஜி அவர்களேயாகும்.

அப்பொழுது எம்.ஜி.ஆர் (1953) "ஜெனோவா" படத்தில் மட்டுமே ஒப்பந்தமாகியிருந்தார். சிவாஜி அவர்களோ மூன்று சிப்ட் முறையில் ஸ்டுடியோக்களில் இரவு - பகலென மிகவும் பிஸியான நடிகராக வளர்ந்துவிட்டார்.

ஆரம்ப காலங்களில் சிவாஜியும் எம் ஜி ஆரும் மிகவும் நெருக்கமாக பழகி வந்தனர். எம் ஜி ஆர் அவர்களின் விருந்தோம்பும் பண்பு பல நேரங்களில் புஹாரி ஹோட்டலிலும் - தாயார் சத்திய பாமாவின் உபசரிப்பாலும் சிவாஜியை மெய்சிலிர்க்க வைத்துள்ளது. சில சமயங்களில் சிவாஜி அவர்கள் வந்தபின்பு தான் எம் ஜி ஆருக்கும் அவர் அண்ணன் சக்கரபாணிக்கும் உணவு பரிமாறப்படும். இத்தகைய நட்பினால் பிணைக்கப்பட்ட சிவாஜி அவர்கள் எப்படியாவது "மலைக்கள்ளன்" படத்தில் அண்ணன் எம் ஜிஆரை நடிக்க வைக்க வேண்டும் என்ற உள்நோக்கம் நிறையவே இருந்தது. புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன்.

இறுதியில் பக்ஷிராஜா நிறுவனம் எம் ஜி ஆரை ஒப்பந்தம் செய்தது. காந்தியவாதியும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான நாமக்கல்லாரின் மனம் கோணாதவாறு கலைஞர் மு கவும் வசனம் எழுதச் சம்மதித்தது எம் ஜி ஆருக்கு பக்க பலமாயிற்று! படம் மகா வெற்றி. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, சிங்களம் ஆகிய ஆறு மொழிகளில் தயாராகி வெளிவந்து இந்திய அரசின் வெள்ளிப்பதக்கம் பரிசு பெற்ற முதல் தமிழ்ப்படம் எனக் கொண்டாடப்பட்டது!

என்னடா இவன் எம் ஜி ஆர் புராணம் பாடுறான் என்று நினைப்பது தெரிகிறது. பின்னால் வந்து "கூண்டுக்கிளி" யைத் திறந்து விடுகிறேன். அதற்கு முன் எம் ஜி ஆருக்கு கலைஞர் எழுதிய மணிரத்தினம் பானியில் அமைந்த சின்ன சின்ன வசனங்களை எழுதி மகிழ விரும்புகிறேன். கலைஞர் மு க சிவாஜிக்கு எழுதும் நீண்ட வசனங்கள் போல் எம் ஜி ஆருக்கு எழுதுவதில்லை.

இதோ மலைக்கள்ளன் படத்தில் நாயகி பானுமதி (பூங்கோதை)க்கும் நாயகன் எம் ஜி ஆருக்குமிடையே நடைபெறும் காதல் உரையாடல்.

பானுமதி : உங்களை யார் இங்கு அழைத்தது?
எம்.ஜி.ஆர் : "மரம் பழுத்தால் வெளவாலை வாவென்றா அழைக்கும்". நான் வருகிறேன்.
பானுமதி : வருத்தமாகப் போகிறீர்களா?
எம்.ஜி ஆர் : "எனக்கென்ன வருத்தம்"
பானுமதி : என்ன இருந்தாலும் இந்த நேரத்தில் தனியாக ஒரு ஆடவனுடன் பேசிக் கொண்டிருப்பது சரியா? நீங்களே சொல்லுங்கள்...
எம்.ஜி.ஆர் : "நான் சரியென்று சொல்லவில்லையே"! .. பூங்கோதை நான் உன்னை உண்மையாகக் காதலிக்கிறேன்" இன்னொரு காட்சியில்..
பானுமதி : யாரது..?
எம்.ஜி.ஆர் : (சிரிப்புடன்) உத்தரவின்றி உள்ளே வந்ததற்கு மன்னிக்கவும்!
பானுமதி : இங்கே எப்படி வந்தீர்கள்?
எம்.ஜி.ஆர் : நல்லவேளை ஏன் வந்தீர்கள் என்று கேட்டிருந்தால் அது சங்கடத்திற்கறிகுறி ! இப்போது நீ எப்படி வந்தீரகள் என்று தான் கேட்டிருக்கிறாய்! இது சம்மதத்துக்கறிகுறி!
பானுமதி : என்ன பேசுகிறீர்கள்..?
எம் ஜி ஆர் : "தமிழ்"!
பானுமதி : அது தெரிகிறது! எதைப்பற்றி பேசுகிறீர்கள் என்று கேட்கிறேன்!
எம் ஜி ஆர் : திருக்குறளைப் பற்றி ...!
பானுமதி : என்ன..?
எம்.ஜி ஆர் : ஆமாம்! அறம்.. பொருள்.. இன்பம்.. திருக்குறளில் இன்பத்தைப் பற்றி.. இப்போது புரிகிறதா.. பூங்கோதை! (பூங்கோதை நாணுகிறாள்) நாணம் பெண்கள் ஆண்கள் மீது தொடுக்கும் பாணம். புரிகிறது, மங்கைக்கு மனப் போராட்டம், மலைக் கள்வனுக்கோ உயிர்ப்போராட்டம் .வருகிறேன்...!
பானுமதி : எங்கே?
எம் ஜி ஆர் : உன் அருகே!
பானுமதி : அத்தான்!
எம் ஜி ஆர் : பூங்கோதை! (இருவரும் அருகருகே)
பானுமதி : நேரான வழி இருக்கும் போது வீட்டுக்குத் தெரியாமல் ஏன் இந்தக் குறுக்கு வழியில் வர வேண்டும்?
எம் ஜி ஆர் : மலரிடம் ஓடிவரும் வண்டு தோட்டக்காரனை எழுப்பி சொல்லிவிட்டா வருகிறது! (சிரிப்பு) அன்றைக்கே சொல்லியிருந்தால் இந்தச் சந்திப்பு இவ்வளவு சுவையாக இருக்காது பூங்கோதை!
பானுமதி : போங்கள் அத்தான் ..! ஒரே குறும்பு..!



கலைஞரின் காதல் வரிகளில் சில துளிகளை என் பேனா மை இங்கு சிந்தியுள்ளது. உணர்ந்து இரசியுங்கள்!

இனி கூண்டுக்கிளியை திறந்து பார்ப்போம்.. "கூண்டுக்கிளி" நடிகர் திலகமும், மக்கள் திலகமும் இணைந்து நடித்து வெளிவந்த ஒரே படம். 1954ல் வெளிவந்த இப்படத்திற்குப் பின் இருவரும் இணந்து நடித்ததேயில்லை. ஆனால் இருவரும் இருக்கும் வரை இதயத்தால் இணைந்தே வாழ்ந்தார்கள். "இதயவீணை" படப்பிடிப்பின் இடைவேளையின் போது பத்திரிகை நிருபர்களுக்கு வழங்கிய ஒரு நேர்காணலின் போது நிருபர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி இது.

கேள்வி : நீங்களும் சிவாஜி கனேசனும் ஒரு படத்தில் சேர்ந்து நடிப்பீர்களா..?
எம் ஜி ஆர் : நடிப்பதாக வைத்துக் கொள்வோம்! யாருக்கு எவ்வளவு வாய்ப்பு அளிப்பது என்ற பிரச்சனை எழாதா? நான் கதை படத்தயாரிப்பு டைரக்ஷன் மற்றும் தொழில்நுட்பத்துறைகளில் கொஞ்சம் அனுபவம் பெற்றவன் என்ற முறையில் கூறுகிறேன், யாருக்கு நேராக கேமராவை வைத்து முக்கியதுவம் அளிப்பது போன்ற பல பிரச்சனைகள் உருவாகும். அப்புறம் இவருக்கு அதிக வாய்ப்பு என்று அவருக்கு அதிக வாய்ப்பு என்று அங்கும் இங்கும் சொல்ல "கால்ஷீட்டு" தகராறு ஏற்பட பட அதிபரின் கதி என்ன ஆகும்? அப்படியே படம் தயாராகித் திரையிடப் படுவதாக வைத்துக்கொள்வோம் "ஆகா! எம் ஜி ஆர் நடிப்புத் தான் பிரமாதம்", என்று ஒரு ரசிகர் சொல்ல, "இல்லை, இல்லை ... சிவாஜி கனேசனின் நடிப்புத்தான் பிரமாதம்" என்று அடுத்த ரசிகர் சொல்ல அடிதடி ஏற்படுமா? ஏற்படாதா? அவர்கள் இந்த போஸ்டர் கிழிக்க... இவர்கள் இந்த போஸ்டர் கிழிக்க பட அதிபர் அம்போ! எனப் பல ஆண்டுகளுக்கு முன் மக்கள் திலகம் வழங்கிய பதில் இது!

"கூண்டுக்கிளி"யின் படத்தின் கதையை முதலில் சிவாஜிக்குத் தான் விளக்கினார் இயக்குனர் ராமண்ணா. கதையின் படி சிவாஜிக்கு எதிர்மறைப்பாத்திரம் . சிவாஜி விரும்பியே அப்பாத்திரத்தை ஏற்றுக்கொண்டார். வசனம் விந்தன். யார் இந்த "விந்தன்" என்று முன்பு ஒரு அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளேன். "கல்கி" காரியாலயத்தில் அச்சுக் கோப்பாளாகவிருந்த கோவிந்தன் என்பவரை - அவரது எழுத்தாற்றலை மெச்சி ஆசிரியர் இரா. கி அவர்கள் "விந்தன்" ஆக வலம் வரச் செய்தார். இப்படத்தில் அவருக்கு உதவியாக பூவை எஸ் ஆறுமுகம் அவர்களும் வசன உதவியாளராவார். "ஜீவா" எனும் பாத்திரத்தில் முதல் காட்சியிலேயே சிவாஜி இப்படித்தான் அறிமுகமாகிறார்! மீண்டும் ஒரு முறை படத்தைப் பார்த்து ரசியுங்கள்.

ஜீவா : "காதலையும் வீரத்தையும் இருகண்களெனப் போற்றி வளர்த்த என் கன்னித் தமிழ்நாடே! நீ காதல் கொண்ட நெஞ்சுக்கு நஞ்சூட்டும் வஞ்சகியாக எப்போது மாறினாய்? (இவ்வரிகளைப் படிக்கும் போது கலைஞர் தான் எனக்கு நினைவுக்கு வருகிறார்!) உலகம் முழுவதும் ஒரே குடும்பம். அதில் வாழும் மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் உறவினர் என்ற பரந்த நோக்கம் கொண்ட என் பைந்தமிழ்நாடே நீ பலருக்கு மத்தியிலே ஒருவனைப் பைத்தியக்காரனாக்கும் திருப்பணியிலே எப்போது இறங்கினாய்?


தாயின்றி வாழத்தகாதவர்களுக்குக் கூட, தனிச்சுதந்திரம் அளித்த என் தாய்த்திருநாடே நீ சஞ்சலத்தால் நெஞ்சுடைந்த பஞ்சைக்கு சாகக்கூடச் சுதந்திரம் அளிக்காத சண்டாளியாக எப்போது மாறினாய்..? ... தங்கள் மனதிற்குப்பிடித்த பெண்களை மணந்து நித்தம் நித்தம் உன் மடியிலே தவழ்ந்து விளையாடுகிறார்களே அதில் எனக்கு மட்டும் என் மனதிற்குப் பிடித்த பெண்ணை மணந்து விளையாட இடமில்லையா... என ஓலமிட்டபடி ரயில் தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்துத் தற்கொலைக்குத் தயாராகி "............" அதோ வந்துவிட்டான் ஆபத்பாந்தவன்... அநாதை இரட்சகன். என்னை ஆட்கொள்ளும் ஆண்டவன்..." என ரயிலை நோக்கிப் புலம்பும் வேளையில்... (ஜீவாவின் (சிவாஜி) தோழன் தங்கராசு (எம் ஜி ஆர்) ணா அவர்கள் தயாரித்து இயக்கிய "கூண்டுக்கிளி" படம் பற்றியும் எழுதி இருபெரும் திலகங்களுக்கும் மரியாதை செய்யும் நோக்குடன் இவ்வாரக் கட்டுரையை எழுதுகிறேன்.

## வீணாவின் கிறுக்கள்

அடுத்தவர் குறையை
பார்க்கும் விழிகள்
தன்குறை என்னவென்று
அறிவதில்லை,
அடுத்தவர் குறையை
பாடும் வாய்க்கோ
தன்குறை என்னவென்று
தெரிவதில்லை,
அடுத்தவர் நோவில்
சிரிக்கும் மனதிற்கு
தன் வினை என்னவென்று
புரிவதில்லை,
விளக்கமில்லா மனிதர்
கூட்டம் உலகம் முழுதும்
வாழ்கையிலே,
இரக்கம் கொண்டு தாயே
நீயும் காத்திடு இந்த பூமியையே!!!

# PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!






**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# Carefirst Family Health Team

## Accepting New Patients




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com





# தமிழ்நாடு பேராசிரியர் சங்கரநாராயணன் நடத்தும் சைவ வகுப்புகள் ஜனவரி 5ம் திகதி ஆரம்பம்

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளுக்குச் சென்று சமய உரைகளை ஆற்றிவருவதன் மூலம், புகழ்பெற்ற பேச்சாளராகத் திகழும் தமிழ்நாடு சேலத்தைச் சேர்ந்த பேராசிரியர் சங்கரநாராயணன் அவர்கள் நடத்தும் உலகளாவிய சைவ வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ம் திகதியன்று இணையவழி ஊடாக நடைபெறுகின்றது என்பதை அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த சைவ வகுப்புகளில் கனடா அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்தும பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இதுவரை பதிவு செய்துள்ளார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்கு 108 வகுப்புக்கள் மூலம் பல சைவ சமய பாடங்கள் இந்த திட்டத்தின் மூலம் கற்பிக்கப்படவுள்ளன. பயிற்சியின் இறுதியில் திறமைகளைக் காட்டும் மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. கனடாவிலிருந்து பதிவு செய்கின்றவர்களுக்கு மாதம் 12 டாலர்கள் மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு வற்ஸ்அப் அழைப்பு மூலம் 919443929560 அல்லது, 918825887116 ஆகிய இலக்கங்களையோ அன்றி கனடாவில் (416) 587-0552 என்னும் இலக்கத்தையோ அழைக்கலாம். அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு avssankr@gmail.com என்னும் விலாசத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.







# கேரள கன்னியாஸ்திரி கொலை வழக்கில் பாதிரியார், கன்னியாஸ்திரிக்கு வாழ்நாள் சிறை

1992-ம் ஆண்டு 21 வயதான கன்னியாஸ்திரி அபயா கொலை செய்யப்பட்ட வழக்கில், கத்தோலிக்கப் பாதிரியார் தாமஸ் கூட்டூர், கன்னியாஸ்திரி செபி ஆகிய இருவருக்கும் இரட்டை வாழ்நாள் சிறை தண்டனை விதித்து சிபிஐ சிறப்பு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது. குற்றவாளிகள் இருவருக்கும் தலா ரூ.5 லட்சம் அபராதம் விதித்தும் நீதிபதி சனல் குமார் உத்தரவிட்டார்.

கேரள மாநிலம் கோட்டயத்தைச் சேர்ந்தவர் கன்னியாஸ்திரி அபயா. கோட்டயத்தில் உள்ள பயஸ் டென்த் என்ற கான்வென்ட்டில் கன்னியாஸ்திரியாக இருந்தார். கன்னியாஸ்திரி அபயா 1992-ம் ஆண்டு மார்ச் 27-ம் தேதி கான்வென்ட்டில் உள்ள கிணற்றில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இதுகுறித்து விசாரணை நடத்திய போலீஸார் கன்னியாஸ்திரி அபயா தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவித்தனர். ஆனால், அபயாவின் பெற்றோர் கேரள உயர் நீதிமன்றத்தில் ஒரு மனுத்தாக்கல் செய்து, தங்கள் மகள் அபயா தற்கொலை செய்யவில்லை, கொலை செய்யப்பட்டதாக சந்தேகிப்பதால் சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரினர். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டது. சிபிஐ நடத்திய விசாரணையில் அபயா தற்கொலை செய்யவில்லை, கொலை செய்யப்பட்டார் எனத் தெரியவந்தது. அபயா கொலை தொடர்பாக பாதிரியார்கள் தாமஸ் கூட்டூர், புத்ருக்காயல் மற்றும் கன்னியாஸ்திரி செபி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கன்னியாஸ்திரி செபியும், பாதிரியார் தாமஸும் நெருக்கமாக இருந்த காட்சியை அபயா பார்த்துவிட்டதால், அவரைக் கொலை செய்து கிணற்றில் வீசியது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, பாதிரியார் தாமஸ், கன்னியாஸ்திரி செபி ஆகியோர் மீது கொலை வழக்கு, குற்றச் சதி, ஆதாரங்களை அழித்தல் ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து திருவனந்தபுரம் சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இந்த வழக்கில் பாதிரியார் புத்ருக்காயலுக்கு எதிராக ஆதாரங்கள் இல்லாததால் நீதிமன்றம் 2018-ம் ஆண்டு அவரை விடுவித்தது.

இந்நிலையில் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜே.சனல் குமார் நேற்று இந்த வழக்கில் தீர்ப்பளித்தார். அதில், பாதிரியார் தாமஸ் கூட்டூர், கன்னியாஸ்திரி செபி ஆகிய இருவரும் குற்றவாளிகள் என்றும், தண்டனை விவரங்கள் புதன்கிழமை அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார். இந்நிலையில் சிபிஐ நீதிபதி சனல் குமார் இன்று தண்டனை விவரத்தை அறிவித்தார். அபயா கொலை வழக்கில் குற்றவாளிகளான பாதிரியார் தாமஸ் கூட்டூர், கன்னியாஸ்திரி செபி ஆகியோருக்கு வாழ்நாள் சிறையும், ஆதாரங்களை அழித்த குற்றத்துக்கு இருவருக்கும் ஆயுள் சிறையும் என இரட்டை ஆயுள் சிறை விதிக்கப்பட்டது. இந்த இரு ஆயுள் சிறையையும் ஏககாலத்தில் இருவரும் அனுபவிக்க வேண்டும். இருவருக்கும் தலா ரூ.5 லட்சம் அபராதமும் விதிக்கப்படுகிறது' எனத் தீர்ப்பில் தெரிவித்தார்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 926


## ஆலடி விநாயகர் ஆலயம் திருகோணமலை

"ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே."

திருகோணமலை ஐயனார்கேணியில் அமைந்துள்ள ஆலடி விநாயகர் ஆலயம் ஏறக்குறைய நூறுவருடங்களுக்கு முன், போக்குவரத்துக்குரிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகக் விளங்கியது. தற்காலத்தில் மாத்தளை என அழைக்கப்படும் பன்னகாமத்திலிருந்து கூடாரவண்டிகளில் வியாபாரப் பொருட்களை ஏற்றிவந்து திருகோணமலையில் வியாபாரம் செய்வது வழக்கம். இவ்வாறு வியாரம் செய்யவரும் வியாபாரிகள் மாட்டுவண்டிகளோடு திருகோணமலை ஐயனார் கேணியில் தங்கி முகாமிட்டு, ஓரிருநாட்கள் தங்கித் தமது பிரயாணத்தைத் தொடர்ந்துள்ளார்கள். இவ்விடத்திலே ஒரு கேணியும், கேணியடியில் பிள்ளையாரும் காணப்பட்டுள்ளது.

இவ்விடத்தைக் கடந்து செல்லும் உள்ளூர் வியாபாரிகளோடு வெளியூர் வியாபாரிகளும் கேணியடிப்பிள்ளையாரை பக்திசிரத்தையோடு வணங்கி வழிபட்டு பூசை செய்த பின்பே தமது பிரயாணத்தைத் தொடர்வர். பின்னாளில் வியாபாரிகள் தங்குமிடமாகப் பயன்பட்ட இவ்விடம் மக்கள் குடியிருப்புப் பிரதேசமாக மாற்றமடைந்தது. இக்காரணத்தினால் சுமார் எண்பது வருடங்களுக்கு முன் ஐயனார்கேணிப் பிள்ளையாரை எடுத்துவந்து திருகோணமலை பத்திரகாளிகோவிலுக்கு அருகேயிருந்த ஆலமரத்தடியில் குடிசைக்கோவில் ஒன்றினை அமைத்து அவ்விடத்திலே எழுந்தருளச் செய்து பக்தர்கள் வழிபாடியற்றி வந்தனர். ஆலமரத்தடியில் வைத்து வழிபட்டு வந்த காரணத்தால் ஆலடிவிநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட இடத்திலே திரு சின்னையாக் குருக்கள் என்பவர் பூசைகளை நடத்தி வந்துள்ளார். இவரின் பின் வேதாரணியத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வேதநாயகக் குருக்கள் என்பவரது மகனான திரு. வே. சுப்பையாக் குருக்கள் என்பவர் 1905 ஆம் ஆண்டளவில் பூசைவழிபாடுகளைத் தொடர்ந்து நடத்தியுள்ளார். இவரது அயராத முயற்சியின் காரணமாக குடிசைக்கோவிலாக இருந்த ஆலடி விநாயகர் ஆலயம் மடாலயமாக மாற்றம்பெற்றது. மாற்றம்பெற்ற மடாலயத்திலே விநாயகரை எழுந்தருளச் செய்து பூசைவழிபாடுகளைச் சிறப்பாகத் தொடர்ந்து நடத்திவந்துள்ளார்.



இக்காலப்பகுதியில் ஆலடிப்பிள்ளையாரின் சிறப்பையும், அருளையும் கேள்விப்பட்ட மக்கள் இவ்வாலயத்திற்கு வருகைதரத்தொடங்கினர். இதன் காரணமாக இவ்வாலயத்திலே பல மாற்றங்கள் ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து ஆலடிவிநாயகரின் அருளைப்பெற்ற அன்பர்கள் இவ்வாலய வளர்ச்சியில் அக்கறைகொண்டு மகாமண்டபம், தரிசன மண்டபம் ஆகியவற்றைக் கட்டிக்கொடுத்தனர். இதன்தொடர்ச்சியாக 1924 ஆம் ஆண்டு இவ்வாலயத்திலே எழுந்தருளி விநாயகரை எழுந்தருளச் செய்தனர். இக்காலம்முதல் இவ்வாலயத்திலே அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. மேலும் பலவிதமான பணிகள் நிறைவேற்றப்பட்டு 1945 ஆம் ஆண்டு சம்புரோட்சண கும்பாபிஷேகம் முதன்முதலாக நிறைவேற்றப்பட்டது.

கும்பாபிஷேகப்பணிகளைத் தொடர்ந்து 1959 ஆம் ஆண்டு திருகோணமலையிலுள்ள அன்பர்களினால் இவ்வாலயத்திற்கு முன்மண்டபமும் சிறிய கோபுரமும் அமைக்கப்பட்டு இவ்வாலயம் புதுப்பொலிவுடன் திகழ ஆரம்பித்தது. மடாலயமாகவிருந்து வளர்ச்சிபெற்ற இவ்வாலயத்தின் கருவறையை திருகோணமலைவாழ் மக்கள் ஒன்றிணைந்து 1970 ஆம் ஆண்டில் புனருத்தாரணம் செய்து, தூபிஅமைத்து கருவறையிலே புதியவிநாயகரை நிறுவினர். இப்புனருத்தாரணப்பணிகளைத்தொடர்ந்து 1972 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாறான பல பணிகள் காலக்கிரமத்தில் நிறைவேற்றப்பட்டமையால் இவ்வாலயம் கற்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், அழகிய கோபுரம் ஆகியவற்றைக் கொண்ட திருக்கோவிலாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் கருவறை அழகிய சுதைச் சிற்பவேலைகளையுடைய தூபியைக்கொண்டதாக விளங்குகின்றது.

இவ்வாலயத்தின் கருவறையில் எழுந்தருளியுள்ள சதுர்புஜ விநாயகப்பெருமான், அபயம், வரதம், அங்குசம், பாசம் ஆகியவற்றைத் தாங்கிய திருக்கரங்களையுடையவராக ஆசனத்தில் இருந்தபாவனையில் காணப்படுகின்றார். இவ்வாலயத்திலுள்ள மகாமண்டபமே வசந்தமண்டபமாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் வடக்குப் பக்கமாக அமைக்கப்பட்டுள்ள பீடத்தில் பஞ்சலோகத்தினாலாகிய விநாயகப்பெருமான், பஞ்சமுகவிநாயகர், மகாவிஷ்ணு, சுப்ரமணியர் ஆகிய மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். இம்மூர்த்திகளுக்கு நித்தியதீபம் ஏற்றிநிலையில் இரண்டு பாவைவிளக்குகள் வசந்தமண்டபத்தில் அமைந்துள்ளது.

ஆரம்பகாலத்திலிருந்த ஐயனார்கேணி விநாயகர் சிலை மற்றும் சிவலிங்கப்பெருமானுடைய திருவுருவம் ஆகியனவும் இம்மண்டபத்திலே வைத்து வணங்கப்படுகின்றது. தரிசனமண்டபத்தில் மூஷிகமும், பலிபீடமும் அமைந்து காணப்படுகின்றது. இம்மண்டபத்தின் சுவர்களில் புராணவரலாறுகளை எடுத்தியம்பும் அழகிய சுவரோவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இச்சித்திரங்கள் விநாயரோடு தொடர்புடைய புராணக்கதைகளைக் கொண்டு காணப்படுகின்றன.

*வளரும்...*

# இவ்வார ராசிபலன்

**25-12-2020 வெள்ளி தொடக்கம் 31-12-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** வசதி வாய்ப்புக்களும், வாழ்க்கைத் தரமும் உயரக்கூடிய நல்ல வாரம். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப் போக்கு மாறும். சுயதொழில் வாய்ப்பு அமையும். மங்களமான திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். ஆபரணப் பொருள் களவு போகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உறவினர் வருகை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல் சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விக்ன விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,7,4,0
அதிர்ஷ்ட எண்: வைலட், அதிர்ஷ்ட எண்: I,G




**ரிஷபம்:** பிறந்த குலத்திற்குப் பெருமை சேர்க்கக்கூடிய நல்ல வாரம். மகிழ்ச்சியான வெற்றி வரும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். செலவுகள் அதிகமாகும். திடீர் செலவு ஏற்படும். நட்பில் பிரிவு ஏற்படும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுபடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன்தரும். பேச்சில் பணிவு தேவை. காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 2,4,6,7
அதிர்ஷ்ட எண்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எண்: D,X




**மிதுனம்:** ஆத்ம திருப்தி கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். மனம் மகிழும் நாள். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத் தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் கூடும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு ஏற்படும். நீண்டநாள் கனவு நிறைவேறும்.
வழிபட வேண்டிய தெய்வம் கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,2,6,9
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,S




**கடகம்:** புதிய வாய்ப்புகளால் பெரிய சிறப்புக்கள் சேரக்கூடிய வாரம். நிதானத்தோடு செயல்பட வேண்டும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். ஆடை, அணிகலன் சேரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத் தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஐஸ்வர்யப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 1,0,3,5
அதிர்ஷ்ட நிறம்: கருமை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,B




**சிம்மம்:** நினைத்ததெல்லாம் நடக்கக்கூடிய நேர்த்தியான வாரம். மனித நேயம் மிகுதியாகும். வீண் செலவு ஏற்படும். விவேகம் வெளிப்படும். வெளியூர் பயணம் உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன் தொல்லை நீங்கும். தோதான எண்ணம் உருவாகும். போதாத காலம் விலகும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு பகவான், அதிர்ஷ்ட எண்: 6,2,3,8
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,L




**கன்னி:** அருமையச் சிநேகிதத்தால் ஆதாயம் கிடைக்கக்கூடிய உத்தமமான கிடைக்கக்கூடிய நன்மையான வாரம். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மங்களச் செய்தி வரும். வாகனச் செலவு ஏற்படும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பொருளாதாரம் உயரும். பணவரவு உயரும். நண்பர்களால் நன்மை உண்டு. பூமி லாபம் உண்டு. பிள்ளைகளால் தொல்லை உண்டு. பதவி உயர்வு வரும். பாதகம் விலகும். பங்குத் தொழில் கவனம் தேவை. தொழிலில் லாபம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: யோக நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 9,0,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,W




**துலாம்:** உறவுப் பெண்களால் உதவி கிடைக்கக்கூடிய உத்தமமான வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத் தொழில் லாபம் தரும்.விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. இடமாற்றம் உண்டு. தடுமாற்றம் ஏற்படும். எதிர்புகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதிதேவியார், அதிர்ஷ்ட எண்: 4,5,3,0
அதிர்ஷ்ட நிறம்: வாடாமலலி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,A




**விருச்சிகம்:** மன அழுத்தமும் ரண வேதனையும் விலகக்கூடிய மகத்தான வாரம். விரக்திகள் மறையும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்பு கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்பு கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,1,7,6
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,Y




**தனுசு:** அதிகாரப் பதவியும் அடி மனதில் திருப்தியும் கிடைக்கக்கூடிய நல்ல வாரம். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. சிறப்புகள் சேரும். வெறுப்புக்கள் அகலும். பங்குச் சந்தை லாபம் தரும். பணவரவு உண்டு. பயணம் அனுகூலம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை கூடும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். சுயநலம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரம்மதேவர், அதிர்ஷ்ட எண்: 4,1,1,9
அதிர்ஷ்ட நிறம், பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,U




**மகரம்:** விருப்பப்பட்ட விஷயங்கள் பொருத்தமாகக் கிடைக்கக்கூடிய திருத்தமான வாரம். திட்டங்கள் வெற்றி பெறும். உழைப்புகள் கடுமையாக இருக்கும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வணிகத் தொழில் விரிவடையும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். நட்பு வட்டம் விரிவடையும் சுபச் செய்தி வந்து சேரும். கனவுகள் நினைவாகும். சுற்றுலா செல்லும் வாய்ப்பு உண்டு. திருஷ்டிகள் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷர், அதிர்ஷ்ட எண்: 8,3,0,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,A




**கும்பம்:** நவீனப் புதுமைகளில் நாட்டம் ஏற்படக்கூடிய நல்ல வாரம். சந்தோஷம் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லைகள் குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். பணத் தேவைகள் அதிகரிக்கும். தொழிலில் கவனம் தேவை. தொலைப்பேசி தகவல் தெந்தரவு ஏற்படுத்தும். புண்ணியஸ்தளங்களுக்கு செல்வீர்கள். நீண்ட நாள் முயற்சிகள் பலன் தரும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,C




**மீனம்:** பற்றாக்குறைகள் நீங்கி எட்டாக்கனி கிடைக்கக் கூடிய ஏற்றமான வாரம். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். போதாத காலம் விலகும். தோதான எண்ணங்கள் உருவாகும். பொருளாதாரம் உயரும். வியாபாரம் திருப்தி தரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். குழப்பங்கள் நீங்கும். மன நிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். வம்பு தும்புகள் தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சக்ரத்தாழ்வார், அதிர்ஷ்ட எண்: 5,1,9,2
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,E




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவிதத்தில் அடைவு பிடிக்கப்படும்



PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.



Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000

# யாழ்ப்பாண பொது நூலகத்தின் நினைவாக ஒரு நூலகத்தை கனடாவில் நிறுவ வேண்டும் என்கிறார் சுவாமி நித்தியானந்த பரமஹம்சர்

## பாரம்பரிய புத்தமத இலக்கியங்கள் கொண்ட நூலகம் ஒன்றை உருவாக்க வேண்டுமென விரும்புகிறேன் என்கிறார் பிரதமர் மோடி

கடந்த டிசம்பர் மாதம் 13ம் திகதி, கனடாவாழ் மக்களுக்குக் குறிப்பாக தீட்சை பெற்றுக்கொண்ட பக்தர்களோடு இணையவழியாக உரையாடிய சுவாமி நித்தியானந்த பரமஹம்சர் அவர்கள் கனடாவிலுள்ள தன்னுடைய பக்தர்கள், தொண்டர்கள் ஆகியோர்கள், ஒன்று சேர்ந்து கனடாவில் ஒரு விசாலமான நூலகத்தை அமைக்க வேண்டும் என்றும் இந்த நூலகமானது, பல ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் அரசின் காடையர்களால் தீயிட்டு அழிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தின் ஞாபகார்த்தமாக அமைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இது ஒரு புறமிருக்க புதுடெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாடு ஒன்றில், பாரம்பரிய புத்தமத இலக்கியங்கள் மற்றும் சிற்பங்களைக் கொண்ட நூலகம் ஒன்றை உருவாக்க வேண்டுமென நான் வலியுறுத்த விரும்புகிறேன் என பாரதப் பிரதமர் தனது விருப்பத்தை பகிர்ந்து கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் "இந்தியாவில் அதுபோன்ற ஒரு நூலகத்தை உருவாக்குவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இந்த நூலகம், பல்வேறு நாடுகளிலும் கிடைக்கக் கூடிய புத்தபிரான் குறித்த இலக்கியங்களை டிஜிட்டல் வடிவில் சேகரிக்கும். அத்துடன், இவற்றை மொழிபெயர்ப்பு செய்து, புத்தமதத்தைச் சேர்ந்த அனைத்து மடாதிபதிகள் மற்றும் அறிஞர்களுக்கு இலவசமாகக் கிடைக்கச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

இந்தியா ஜப்பான் ஆறாவது கலந்துரையாடல் மாநாடு நேற்று முன்தினம் காணொலி வாயிலாக நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் போதே பிரதமர் மோடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இந்தியா ஜப்பான் ஆறாவது கலந்துரையாடல் மாநாட்டில் உரையாற்றுவது மிகுந்த பெருமிதம் அளிக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு முன்பு முன்னாள் பிரதமர் சின்ஷோ அபே-யுடன் இது போன்ற மாநாடுகளை நாம் தொடங்கினோம்.

அப்போது முதல், புதுடெல்லியிலிருந்து டோக்கியோ, யாங்கோன் முதல் உலான் பாட்டர் வரையிலும், மாறி மாறி கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது. இந்தப் பயணம், அதன் அடிப்படை நோக்கங்களான, பேச்சுவார்த்தை மற்றும் விவாதங்களை ஊக்குவித்தல், ஜனநாயகத்தைப் பற்றிய பகிர்ந்துகொள்ளப்பட்ட நற்பண்புகளை, மனிதாபிமானம், அஹிம்சை, சுதந்திரம் மற்றும் சகிப்புத்தன்மை, போன்றவற்றை தொடர்ந்து உண்மையாக முன்னெடுத்துச் செல்வதோடு, நமது பண்டைக்கால பாரம்பரிய ஆன்மீக மற்றும் அறிவாற்றல் பரிமாற்றம் போன்றவையும் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

இதுபோன்ற கலந்துரையாடல்களுக்கு தொடர்ந்து உறுதியான ஆதரவு அளித்து வருவதற்காக, ஜப்பான் அரசுக்கு நான் நன்றிகூற விரும்புகிறேன்.

இந்த அமைப்பு, புத்தபிரானின் தலைசிறந்த சிந்தனைகள் மற்றும் கொள்கைகள் ஊக்குவிக்கப்படுவதை, குறிப்பாக இளைஞர்களிடையே பிரபலப்படுத்துவதை உறுதிசெய்ய சிறப்பாக பணியாற்றி வருகிறது. வரலாற்று ரீதியாக, புத்தர் ஏற்றிய ஞான ஒளி, இந்தியாவிலிருந்து, உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியுள்ளது. எனினும், இந்த ஒளி, ஒரே இடத்தில் நின்றுவிடவில்லை. அது சென்றடையும் ஒவ்வொரு புதிய இடத்திலும், புத்தமத சிந்தனைகள், பல நூற்றாண்டுகளாக சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, புத்தமத இலக்கியங்கள் மற்றும் தத்துவங்களின் பொக்கி'த்தை, தற்போது பல்வேறு மொழிகளில், பல்வேறு நாடுகளில் உள்ள புத்த மடாலயங்களிலும் காண முடிகிறது. இந்த எழுத்துக்களின் மையக்கருத்து, ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் பெரும் பொக்கி'மாக கருதப்படுகிறது.

இதுபோன்ற பாரம்பரிய புத்தமத இலக்கியங்கள் மற்றும் சிற்பங்களைக் கொண்ட நூலகம் ஒன்றை உருவாக்க வேண்டுமென நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தியாவில் அதுபோன்ற ஒரு நூலகத்தை உருவாக்குவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இந்த நூலகம், பல்வேறு நாடுகளிலும் கிடைக்கக் கூடிய புத்தபிரான் குறித்த இலக்கியங்களை டிஜிட்டல் வடிவில் சேகரிக்கும்.

அத்துடன், இவற்றை மொழிபெயர்ப்பு செய்து, புத்தமதத்தைச் சேர்ந்த அனைத்து மடாதிபதிகள் மற்றும் அறிஞர்களுக்கு இலவசமாகக் கிடைக்கச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நூலகம், இலக்கியங்களின் சேகரிப்பு இடமாக மட்டும் இருக்காது. அவை, மனிதகுலம், சமுதாயம், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயான உண்மையான விவாதங்களை மேற்கொள்வதற்கும், ஆராய்ச்சி மற்றும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான ஒரு தளமாகவும் அமையும்.

இங்கு மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள், புத்தரின் போதனைகள், தற்கால சவால்களை எதிர்கொள்வதில் நவீன உலகிற்கு எவ்வாறு வழிகாட்டுகிறது என்பதை விளக்குவதாக அமையும். வறுமை, இனவாதம், தீவிரவாதம், பாலின பாகுபாடு, பருவநிலை மாற்றம் போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்வதற்கும், இந்த ஆராய்ச்சிகள் உதவிகரமாக அமையும்.

மூன்று வாரங்களுக்கு முன்பு, நான் சாரநாத் சென்றிருந்தேன். புத்தபிரான் ஞானம் பெற்றபிறகு, தமது முதல் உபதேசத்தை வழங்கிய சிறப்புக்குரிய இடம் சாரநாத் ஆகும். சாரநாத்திலிருந்து கிளம்பிய இந்த நிறை ஒளி உலகெங்கும் பரவி, கருணை, பெருந்தன்மை, மற்றும் அனைத்திற்கும் மேலாக, ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் நன்மை பயக்கக்கூடிய நலன் போன்ற நற்பண்புகளை தழுவச் செய்யும். அத்துடன், உலக வரலாற்றையும், மெதுவாகவும், அமைதியாகவும் மாற்றியமைத்தது. சாரநாத்தில் தான் புத்தபிரான், அதிருப்தி மற்றும் பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான தமது போதனைகளை விரிவாக விளக்கினார்.

வழிபாடுகள் மற்றும் மதச் சடங்குகளைவிட, இதுபோன்ற செயல்களுக்குத்தான் புத்தபிரான் முக்கியத்துவம் அளித்தார். வரலாற்றுச் சரிபார்ப்புகள், ஒரு மனிதன் தனது சக மனிதனுடன் கொண்டுள்ள உறவின் மையமாக, புத்தபிரானின் போதனைகள் திகழ்கின்றன. எனவே, இது மற்றவர்களின் வாழ்வில் நேர்மறை சக்தியை ஏற்படுத்துவதற்கு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அந்த வகையில், பேச்சுவார்த்தைகள், இதுபோன்ற நேர்மறை உணர்வுகள், ஒற்றுமை மற்றும் கருணையை, அண்டம் முழுவதும் பரவச் செய்யும். அதுவும், இத்தகைய நற்பண்புகள் நமக்குத் தேவைப்படும் தருணத்தில் கிடைக்கச் செய்யும்.



இந்த சகாப்தத்தின் முதல் பேச்சுவார்த்தை இதுவாகும். மனிதகுல வரலாற்றின் முக்கியத் தருணத்தில், இந்தப் பேச்சுவார்த்தை நடக்கிறது. நமது இன்றைய செயல்பாடுகள், வருங்கால பேச்சுவார்த்தைகளுக்கு வடிவம் கொடுப்பதாக அமையும். இந்த தசாப்தமும், அதற்குப் பிந்தைய காலகட்டமும், ஒருங்கிணைந்த புதுமை முயற்சிகள் மற்றும் கற்றலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் சமுதாயத்தைச் சார்ந்ததாக இருக்கும். வருங்காலத்தில் மனிதகுலத்திற்குத் தேவையான நற்பண்புகளை வெளிப்படுத்தும் அறிவாற்றல்மிக்க இளைஞர்களை வளர்ப்பதாகவும் இது அமையும்.

# வேள்வியும், யாகமும்



ஆதிகாலம் தொட்டுப் பலவகை-யான வேள்விகள் நடத்தப்பட்டு வருகின்றன. சங்க இலக்கியங்களில் வேள்வி பற்றிய குறிப்புகள் ஏராளமாக உள்ளன. வடமொ-ழி இலக்கியங்கள் யாகங்களைப் பற்றிச் சிறப்பாக கூறுகின்றன. வேள்வியில் முக்கிய சடங்காக "பூர்ணாகுதி" அல்லது அவிர்பாகம் என்பதை வட நூலார் குறிப்பிடுகின்றனர். இந்த அவிர்ப்பாகம் என்பது என்ன? எந்தப் பொருளை அவிர்ப்பாகம் கொடுக்க வேண்டும் (யாகத்தில் இடவேண்டும்.)

. இந்த அவிர்பாகம் யாருக்கு கொடுக்க வேண்டும். இதனை யார் பெற்றுக் கொள்கின்றார்கள். இந்த அவிர்ப்பாகத்தை ஏன் கொடுக்க வேண்டும். எனப் பல கேள்விகள் தொங்கி நிற்க்கின்றன. தட்சன் ஒரு வேள்வி செய்தான். ஆதற்காக ஆயத்தங்கள் செய்கின்றான். தெய்வங்கள், தேவர்கள் மற்ற முன்னோர் யாவரையும் யாகத்திற்கு அழைத்து விட்டான். ஒரே ஒருவரை மட்டும் அழைக்கவில்லை...!

யார் அவர்... அவர்தான் மருமகன் சிவபெருமான். தன் மகளான தாட்சாயணியை மணந்து கொண்டவர். அவருக்குரிய அவிர் பாகத்தையும் தரக்கூடாது என யா-கசாலை கர்த்தாவிடம் சொல்லி விடுகிறான். பின்னர் நடந்த வரலாறு அனைவருக்கும் தெரியும். அவிர்ப்பாகம் என்பது உரிய மரியாதை என்றும் கருத்திலேதான் வழங்கப்படுகின்றது.

மற்றும் ஒரு நிகழ்வு! தெவர்கள் எல்லாம் ஒன்று கூடினர். இந்திரனைச் சந்தித்தனர். எங்கள் தலைவா! தெவேந்திரா பிரபு! நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடுகிறது. தீயோர் பெருத்து விட்டனர். அறம்புரி நெஞ்சமுடைய நல்லோர் யாகம் செய்ய முடியவில்லை.

மக்கள், முனிவர்கள், ரிஷிகள் யாவரும் தீயவர்களின் இடையூறு காரண-மாக யாகங்களை செய்ய முடியவில்லை. யாகங்கள் செய்யப்படாமையால் எங்கள் பசி அதிகமாகி விட்டது. உணவின்றி அலைகின்றோம். யாககங்கள் போடப்படும் அவிர்ப்பாகத்தை உண்டே நாங்கள் இத்தனை நாள் உயிர் வாழ்ந்து வருகின்றுறோம். தற்சமயம் பசிபோக்கும் உணவாகிய அவிர்ப்பாகம் எங்களுக்கு கிட்டவில்லை என முறையிட்டதாக ஒரு வரலாறு உண்டு.

யாகத்தில் இடப்படும் அவிர்பாகம் தேவர்களுக்கான உணவு. இது தெய்வங்களை மகிழ்விக்கக்கூடியது. நாம் கொடுக்கும் அவிர்ப்பாகத்தை அவர்கள் ஏற்று மகிழ்ந்து. நம்முடைய வேண்டுதல்களை நிறைவேற்றுகின்றார்கள்.

அவிர்பாகம் என்பது தேவர்களும், மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு சிவன். தெய்வங்களுக்கும். குலதெய்வங்களுக்கும், முன்னோர்களுக்கும் யாகம் செய்து அக்கினி மூலம் தரவேண்டிய பொருள். நாம் இதயத்தில் பெறவெண்டிய அனைத்தச் செல்வங்களையும் பெற வேண்டி நமக்கு வேண்டியதை அடைவதற்காகச் செய்யப்படுகின்றன. எந்தக் காரியம் செய்தாலும் என்னை வணங்கி விட்டுத்தான் செய்ய வெண்டும். எனக்குரியதைக் கொடுக்கவேண்டும். என்னுடன் ஐய்யனார், காட்ன், மாடன், மாரி எழு கன்னியர் எல்லொரும் உள்ளனர். நாங்கள் காவல் தெய்வங்கள் மட்டுமல்ல. ஆதிபராசக்தி இடும் கட்டளையை நிறைவேற்றும் ஏவல் செய்யும் தெய்வங்கள். சிறுதெய்வங்கள். நீங்கள் செய்யும் யாகத்தில் நீங்கள் இடும் 'அவிஸ்ஸின் ஒரு பங்கை நாங்கள் பெற்றுக் கொள்ள ஆதிபராசக்தி ஆணையிட்டிருக்கின்றாள். யாகங்கள் உலக நன்மைக்காகவும் பல வேள்விகள் செய்யப்படுகின்றன. தெய்வங்களையும், தேவர்களையும் மரியாதை செய்யவும், அவர்களின் பசியைக் போக்கவும் அவர்களை மகிழ்விக்கவும் நாம் விரும்பியதை அடையவும் யாகங்கள் செய்யப்படுகின்றன.

*நன்றி "சக்தி ஒளி"*

# சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி

**துன்னையூர் கலாநிதி ராம தேவலோகேஸ்வரக் குருக்கள்**
**(சாரதா பீடம் ஜோதிடம்) 94 777 915685**

*நவக்கிரகங்களின் மிகவும் முக்கியத்துவமாக கிரகம் "சனீஸ்வரன்" நமது கர்ம வினைகளுக்கு ஏற்புடைய பலா பலங்களை பாராபட்சம் இன்றி தருகின்றவர் யாழ்ப்பாணம் இரகுநாதஐயர் வாக்கிய பஞ்சாங்க கணிதப்படி சார்வரி வருடம் மார்கழி மாதம் 11ம் நாள் சனிவாரம் மாலை 6மணி 03 நிமிடநேரம். (26-12-2020 கனடா நேரம் 6.03மாலை) சனிபகவான் தனுசு ராசியில் இருந்து தனது சொந்த வீடான மகர ராசிக்கு பெயர்ச்சி பெறுகின்றார். இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்தப் பெயர்ச்சி அமையும். இதன் மூலமாக அதிகமான நன்மைகள் பெறகின்ற ராசிகளாக இடபம், சிம்மம், விரட்சிகம். மீனம் அமைகின்றன. மத்திமமான பலன் பெறும் ராசிகள் மேடம், கடகம், கன்னி அமைகின்றன. மற்றும் சிரமமான பலன்களை துலாம், தனுசு, மகரம், கும்பம் மிதுனம் ராசிகள் பெறுகின்றன. பொதுவாகவே சிரமபலன் கொண்ட ராசியினர் சனிவாரம் உள் எண்ணெய் சிட்டி ஏற்றி சனீஸ்வரனுக்கு நீலநிற பூவால் சங்குப்'பம், நீலோத்பவம் மலரினால் அர்ச்சனை வழிபாடு செய்து உங்களின் குல தெய்வ வழிபாடும் செய்து கொள்வது மிகவும் நல்லது. ஏழரைச்சினி, அட்டமச்சனி, அஷ்டார்த்தசனி என்பன அமையும் ராசிகளாக மிதுனம், துலாம், தனுசு, மகரம் நிதானமாக செயற்பட வேண்டும். ஆலயங்களுக்கு இரும்பு தானம் வழங்குவது மிகவும் சிறப்பாகும். ஆலய பராமரிப்பிற்கு உரிய மண்வெட்டி, கத்தி, வாள், அலவாங்கு இரும்பிலான கதவு போன்ற திருப்பணிகள் செய்வது மிகவும் நல்லது. நேர்மையான செயற்பாடும் மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாத வாழ்வும் செய்யும். தொழிலிலே இன்முகமான சந்தோ'மான செயற்பாடும், குடும்ப நிலையில் தார்மிகமான கடமையுணர்வுடைய செயல்பாடும் அறம்தவறாத இறை வழிபாடுகளும் எப்போதும் எம்மை பெரும் வீழ்ச்சியில் கொண்டு செல்ல இடம் கொடுக்காது. எனவே அனைவரும் மனித நேயம் கொண்டு செயற்படுவோம். அனைவர் வாழ்விலும் இன்பம் பொழிய இறையருளட்டும்!..*

### சிம்மராசி:
### (மகம், பூரம், உத்திரம் 1ம் பாத நட்சத்திரங்கள்)

நல்ல ஆளுமையும், தைரியத்தோடு எதையும் எதிர் கொள்ளும் ஆற்றலும் கொண்ட சிம்மராசி அன்பர்களே!
உங்களின் ராசிக்கு யோகஸ்த்தானமாகிய 6ம் இடம் சனீஸ்வரன் அமைகின்றார். எதையும் சாதித்து வெற்றி பெறக்கூடிய காலமாக இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு அமைகின்றது. தொழில் சார்ந்த நல்ல முன்னேற்றம் இருக்கும். குடும்ப நிலையில் மகிழ்வும், எதிர்பாராத நன்மைகளும் அமையும். பலனிருக்கும். உங்களின் நீண்ட கால பிரச்சனைகள் எல்லாம் மிகவும் சுமூகமாக தீரும் நிலை அமைந்திருக்கும். கடன் பிரச்சனைகளில் நல்ல தீர்வுகள் அமையும். உங்களின் எதிரிகளும் உங்களைப்பணிந்து செயல்படும் நிலை அமையும். திருமணம் போன்ற சுபகாரியங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் மிகவும் சிறப்பாக அமையும் பலன் ஏற்படும். தொழில் சார்ந்த புதிய முயற்சிகள் நல்ல வெற்றியைக் கொடுக்கும். எதையும் சுலபமாக வெற்றிகரமாக செய்யக்கூடிய பலன் அமையும். உறவினர்களின் மூலமாக நற்பலன் அமையும் நிலை இருக்கும் பொதுவாக புதிய வழிகள் மூலமாக பணவரவு அமையும் நிலை ஏற்படும். எல்லா வகையிலும் சிறப்பான நல்ல அனுகூலமான பலாபலன்கள் அமையும் நிலை இந்த சனிப்பெயர்ச்சி மூலமாக அமையும். அதற்கு ஏற்ப நல்ல வெற்றியை பெறுக!

### கன்னி:
### (உத்திரம் 2, 3, 4, 5ம்பாத, அத்தம், சித்திரை 1ம், 2ம் பாதம்)

நல்ல நிதானத்தோடும், அதிகமான சந்தோன சிந்தனை கொண்டும் குழப்பம் உடைய மன நிலையுடைய கன்னிராசி அன்பர்களே! உங்களின் ராசிநிலைக்கு பஞ்சமஸ்தானமாகிய 5இடம் சனி பகவான் சஞ்சரிக்கின்றார். சற்று குழப்ப நிலை இடையே ஏற்படும். தொழில்நிலை சார்ந்த வேலைப்பளு குழப்பநிலைகள் இடையிடை ஏற்படும். பணவரவு சற்று மத்திமமாகவே அமையும். பிள்ளைகளின் மூலமாக மனச் சஞ்சலங்களும், திடிர் செலவுகளும் அமையும் நிலைகள் இருக்கும். பூர்வீக சொத்துக்களில் சிக்கநிலை வழக்கு விவகாரம் என்பன அமையும் பலன் இருக்கும்.அதற்கு ஏற்ப நிதானமுடன் செயற்படவேண்டும். கடன் நிலைசார்ந்த சிறு, சிறு சிக்கல் நிலைகளும அமையும். உறவனர்களின் மூலமாகவும் சிக்கல் இழுபறி நிலை அமையும். தனிமை மனநிலை சஞ்சலம், எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம். தொழில் நிலை சக தொழில் உத்தியோகத்தருடன் மனச்சஞ்சல நிலைகள் இப்படியாக எதேனுதம் ஒரு சிக்கல் உங்களைச் சூழும் நிலை இருக்கும். அதற்கு ஏற்ப பொறுமையோடு செயல்படவும்.

### விருச்சிகம்:
### (விசாகம் 4ம் பாதம். அனுஷம். கேட்டை)

மனதிலே எப்போதும் அதீத சிந்தனை கொண்ட தமது எதிர்கால உயர்வு பற்றி செல்படும். விருச்சிகராசி அன்பர்களே! உங்களுக்கு சனீஸ்வரன் ஜெயஸ்தானம் எனப்படும் 3ம் இடம் அமைந்து அனுகூலமான நற்பலன்களை கொடுக்கப்போகிறார். ஏழரச்சனி எனும் கடந்த அரை ஆண்டு சனீஸ்வர சஞ்சாரத்தின் மூலம் பலவித இன்னல்களுக்கு முகம் கொடுத்து வெளியே வருகின்றார்கள். எனவே இனி அமையும் பலாபலன்களை உங்களின் எதிர்பார்ப்புகளை நிறைவெற்றி வைக்கும். எந்த வாய்ப்பு உங்களுக்கு மிக அதிகமாக உண்டு. தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமானதாக இருக்கும். கடன் நிலையில் சுமூகமான நிலை ஏற்படும். பூர்வீக சொத்துக்கள் வந்து சேரும் நிலயிருக்கும். உறவினர்களின் மூலமாக நன்மைகள் ஏற்படும். பதவி உயர்வு. திடீர் பிரயாணங்கள். வெளிநாட்டு பிரயாணம் என்பன அமையும் நிலை இருக்கும். எதையும் சாளித்து செயற்படும். ஆளுமைத்திறன் அமையும். பெண்களுக்கு நற்பலன்கள் ஏற்படும். மாணவர்களின் கல்வி நிலையில் அனுகூலமான பலன்கள் அமையும். இந்த சனிப்பெயர்ச்சி எல்லாவகையிலும் நன்மைகள் கொடுக்கும்.

### தனுசுராசி:
### (மூலம், பூராடம், உத்திராடம்1ம் பாதம்)

எதிலும் உங்களின் மழு முயற்ச்சியை மட்டுமே செயற்படும் ஆற்றலும். தளர்விலாத மனமும். செயலும் அதிகமாக கொண்ட தனுசுராசி அன்பர்களே! கடைச்சுற்று சஞ்சாரமாக அமைகின்றார். எடுக்கும் முயற்ச்சிகளில் மிகவும் பொறுமை, நிதானம் கொண்டு செயற்பட வேண்டும். மன நிலையில் அதிகமான யோசனை இருக்கும். பணவரவு மத்திமமாக இருக்கும். தொழில் சார்ந்த வேலைப்பழு அதிகமாக இருக்கும். திடீர் மருத்துவ செலவுகள் அமைகின்ற நிலையும் இருக்கும். குடும்ப நிலையில் தேவையற்ற பிரச்சனை சூழும் நிலையிருக்கும். தொழில் நிலைகளில் சிக்கல் இழுபறி நிலைகள் தொழில் இடமாற்றம். ஏதேனும் ஏற்படும். அல்லது தொழில் அற்ற நிலைகளும் அமைய இடமுண்டு. மிக பொறுமை. நிதானத்துடன் செயற்பட வேண்டும். எதையும் திட்டமிட்டு செய்திட முடியாதநிலை அமையும். குடும்ப நிலை சார்ந்த சிக்கல் இழுபறி நிலைகளும் அமையும். கொடுக்கல், வாங்கல் மிகவும் நிதானமாக பொறுமையோடு செயற்படவேண்டும். தேவையற்ற வீண் சிக்கல் நிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையும் இருக்கும். பெண்களுக்கு சற்று சஞ்சலமான நிலயும். யோசனை என்பன அமையும் நிலையிருக்கும். குடும்ப நிலைசார்ந்த மனக்குழப்பமும் அதிகமாக இருக்கும். எதையும் திட்டம் இட்டு செய்ய முடியாத ஏதேனும் ஒரு இழுபறி நிலை ஏற்படும். மாணவர்கள் கல்வி நிலயில் கூடுதலான கவனம் எடுக்க வேண்டும். பொதுவாகவே இந்த ஏழரைச்சனியின் கடைக்கூற்று சஞ்சாரம் மிக நிதானத்தோடு செயற்படும் காலமாகும்.

### மகரராசி:
### (உத்திராடம் 2,3,4ம் பாதம், திருகோணம், அவிட்டம் 1,2 பாதம்)

மனத்தைரியம் அதிகம் கொண்டு செயற்படுகின்ற நீங்கள் பல விடயங்களில் எதிர்ப்பு நிலைகள் எதிர் கொள்ளும் சூழலும் உண்டு. உங்களின் ராசி நிலைக்கு சனீஸ்வரன் ஏழரைச்சனி "ஜென்மச்சனி" சஞ்சாரமாக அமைகின்றார்.

உங்களின் ராசி நிலையிலேயே அமைவதனால் சற்று பிரச்சனை சஞ்சலம் அதிகமாகவே அமைந்திருக்கும். தொழில் சார்ந்த எதிர்பாராத திடீர் பிரச்சனைகள் ஏற்படும். உங்களின் எண்ணங்களும், திட்டங்களும் செயல்படுத்த முடியாத நிலை அமையும். எதிலுமே மிகவும் பொறுமை, நிதானத்துடன் செயற்படுவதே மிக நல்லது. உடல் நிலையில் திடீர் சுகயீனங்களும். சிலருக்கு சிறு சத்திர சிகிச்சை அமையம் நிலையும் ஏற்படும். கொடுக்கல். வாங்கலில் சிக்கல் நிலைகள் அதிகமாக இருக்கும். புதிய முயற்ச்சிகளில் தடையும், தாமத நிலையும். வழக்கு விவகாரங்களில் உங்களின் நிலை சிக்கலானதாக அமையும். தனிமை, சிறைவாச நிலை போன்ற பலாபலன்களையும் ஏற்படுத்தும் நிலை அமையும். நண்பர்களும் உங்களை பகைத்துக் கொள்ளும் நிலை. உறவினர்களுடன் மனச்சங்சலம் போன்ற பலன்கள் இருக்கும். பூர்வீக சொத்து விவகாரம் சற்றுப் பிரச்சனைகளை தருவதாக இருக்கும். எனவே பிரச்சனையான தேவையற்ற விடயங்களை தவிர்த்து செயற்படுவது மிக, மிக நன்மை தரும். பெண்களுக்கு மனச்சஞ்சலமும். காரியத்தடையும் அமையும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் தேவை. நீங்களும் உங்கள் பாடும் என இருப்பது மிகவும் நல்லது.

### கும்பராசி:
### (அவிட்டம் 3,4ம் பாதம், சதயம், புரட்டாதி 1, 2ம் பாதம்)

எல்லா விடயத்திலும் உங்களை காத்துக் கொள்ளும் நல்ல ஆழுமையும், ரகசியங்களை காத்து செயற்படும் தன்மையும் கொண்ட கும்பராசி அன்பர்களே! உங்களின் ராசிக்கு ஏழரைச்சனி ஆரம்பமாகின்றது. எனவே மிக, மிக பொறுமை, நிதானமாக நீங்கள் செயல்பட வேண்டும். தொழில் நிலை சார்ந்த தேவையற்ற பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கும். மிகவும் நிதானத்தோடு செயல் படுவதே நல்லது. குடும்பத்தில் சற்றுக் குழப்பான நிலை இருக்கும். மனதிலே எதேனும் ஒரு சஞ்சலம் யோசனை அமைந்து கொண்டேயிருக்கும். எதிர்பார்ப்புகளில் தடை தாமத நிலைகள் அமையும். எனவே மிகவும் சாணக்கியமாக எதையும் எதிர் கொள்ளும் மன தைரியத்தோடு செயற்படுவதே மிக, மிக நல்லது. கடன் நிலைகளில் இழுபறி சிக்கல் நிலைகள் இருக்கும். பண நட்டம், பொரும் நட்டம். வாகன நட்டம் என எதேனும் இடையிடையே அமையும் பலன் இருக்கும். புதிய முயற்ச்சிகளில் மிகவும் நிதானமாக செயற்படவேண்டும். உடல் நிலை சார்ந்த ஏதேனும் சிறு சத்திர சிகிச்சையும் அமையலாம். நண்பர், உறவினர்களுடன் தேவையற்ற பிரச்சனை நிலை பகைமை என்பன ஏற்படும் நிலகளும் அமையும். எனவே உங்களின் நடைமுறைகளில் வரையறை கொண்டு செயற்படுவதே மிக நல்லது. பெண்களுக்கு மனச் சஞ்சல் மிக அதிகமாக இருக்கும். மாணவர்கள் கல்வி நிலையிலே கூடதலாக கவனம் எடுக்க வேண்டும். எல்லாவகையிலும் இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு சிறப்பானதல்ல அதற்கு ஏற்ப செயற்படவும்.

### மீனராசி:
### (புரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

அதிகமான செயல்களிலும் முன்னிலை வகிக்கின்ற குணமும். உங்கள் வச காரியத்திறனும் அதிகமாகக் கொண்ட மீனராசி அன்பர்களே!
உங்களின் ராசிக்கு லாபஸ்தனமாகிய 11ம் இடம் சனிபகவான் அமைகின்றார். எனவே எதிர்பார்ப்புகளில் சிறப்பான வெற்றிகள் அமையும். தொழில் சார்ந்த மன்னேற்றம் மிகவும் சிறப்பாக அமையும். குடும்ப நிலையில் அனுகூலமான நற்பலன்கள் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமானதாக அமையும். எதையும் திட்டமிட்டு செய்து கொள்ளும் அனுசலங்கள் அமையும். கடன் நிலைகளில் சுமூகமான பலன் இருக்கும். திருமணம் போன்ற சுபகாரியங்களை எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் மிகவும் சுமூகமாக அமையும் பலன் இருக்கும். எல்லாவகையிலும் உங்களின் செயற் பாடுகளில் வெற்றிகள் பெறக்கூடிய நிலைகள் அமையும். உறவினர்களின் மூலமாக நன்மைகன் அமையும். தொழில் நிலை சார்ந்த பதவி உயர்வுகள். புதிய தொழில் முன்னேற்றம் போன்ற பலன்களுக்கும் இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் நல்ல வெற்றிகள் அமையும். பெண்களுக்கு மனமகிழ்வும் மிகவும் சிறப்பான பலன் இருக்கும். கல்வி நிலை முன்னேற்றம் ஏற்படும். பொதுவாகவே இந்தச் சனிப் பெயர்ச்சியானது மிகவும் சிறப்பான அனுகூலமான கலன்கள் கொடுக்கும்.


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
தங்கம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

## TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9


## கனடாவில் தமிழ் மக்கள் நாடிச் செல்லும் நம்பிக்கையான புடவை மாளிகை Fashion World

கனடாவில் தமிழ் மக்கள் நாடிச் செல்லும் நம்பிக்கையான புடவை மாளிகை Fashion World நிறுவனத்தினர் தற்போது கொரோனா கட்டுப்பாடுகளுக்கு அமைய CURB-SIDE PICK UP முறையில் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றார்கள்.
உடனே அழையுங்கள்:-
647 649 3680


Fashion World Inc
Tel: 905 471 2223

We will be available virtually and offering **CURB-SIDE PICK-UP** to provide our services safely during these difficult times.

**Call us at**
**647-649-3680**
**647-967-3680**



## ஸ்ரீவெங்கடேஸ்வரா ஸ்ரீஅபிராமி திருமணமாலை

### முன்கட்டணம் $30

Canada, France, Germany, Italy, U.K., Switzerland, India, Sri Lanka நாடுகளிலுள்ள பட்டதாரிகள், Divorce ஆனவர்களோடு எல்லா வகுப்பினர்கள் உட்பட 300 மேற்பட்ட ஜாதகங்கள் படத்துடன் எம்மிடம் உள்ளனர்.

**கனடா பெண்கள்:**

1. 13.09.1993, கிறிஸ்தவர் - சிகை அலங்கரிப்பாளர்
2. 10.11.1991, உத்தராடம் - 4, B.Sc Kaddady
3. 25.04.1989, கேட்டை Engineer
4. 5.10.1988, ஆயிலியம், B.Sc
5. 5.03.1987, பரணி, Chemical Engineering

**கனடா ஆண்கள்**

1. 4.03.1981, Cheff (Working)
2. 22.01.1983, அச்சுவினி, A/C Analist (Hydro - Government)
3. 16.09.1987, திருவாதிரை, Electrical Engineer (Working)
4. 21.03.1980, கார்த்திகை, (U.K) MSc. - Computer Science)

Divorce - No Children - Canada (Male)
1. 5.06.1968, உத்தரம், Purchasing Officer


Divorce - No Children - Canada (Female)
1. 12.06.1983, விசாகம், B.Com (Working)

Divorce - In U.K (Male) - Doctor - MBBs. MRCGP, (G.P. - Partner)
28.07.1981, திருவாதிரை - U.K. - Europe Only

தலைவரின் வழியைப் பின்பற்றி தமிழர்களின் தாகத்தைத் தீர்க்கப் பாடுபடும் நாம் தமிழர் சீமானின் கைகளைப் பலப்படுத்துவோம் - நன்றி

கனடா ராம் அலெக்ஷாண்டர் **Tel: 416 720 8975**






## Amma Pawn Broker
## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்



**1.0% முதல் 1.5% வரை**

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்



### அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# 6ம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்ணில்:**
**09-04-1928**

**விண்ணில்:**
**03-01-2014**



**அமரர். அற்புதம்மா சந்தியாப்பிள்ளை**

யாழ். ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப்
பிறப்பிடமாகவும். வதிவிடமாகவும் கொண்ட
திருமதி. அற்புதம்மா சந்தியாப்பிள்ளை அவர்களின்
ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி.

*எம் மூச்சிலும், உதிரத்திலும் உரமாய் கலந்து*
*எம் உயர்வுக்காய் உனை உருக்கி உழைத்த*
*எம் குடும்பத்தின் குல விளக்கே! மங்காத*
*எம் மனங்களில் இருள் போக்கும் ஒளி விளக்கே நீ அம்மா*

*ஆழ்கடல் அலை அடிக்க மறப்பினும்*
*ஆதவன் வானில் உதிக்க தவறினும்*
*ஆலயங்களில் மணி ஓசை ஒலிக்காவிடினும்*
*அம்மா என்ற ஒலி எம்மிடத்தே என்றும் ஒலிக்குதம்மா*

*எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும்*
*எத்தனை வருடங்கள் சென்றாலும்*
*எங்கள் உள்ளத்தை விட்டு*
*என்றுமே உம் நினைவு அகலாதம்மா*

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள். மருமக்கள். பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகள்
தகவல் :உதயன் (மகன்)
416-736 3760


# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

# அன்பின் தொனி - 592

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

### தேவனே, உம்மைத் துதிக்கிறோம்

உம்மைத் துதிக்கிறோம், தேவனே, உம்மைத் துதிக்கிறோம், உமது நாமம் சமீபமாயிருக்கிறதென்று உமது அதிசயமான கிரியைகள் அறிவிக்கிறது. நியமிக்கப்பட்ட காலத்திலே, யதார்த்தமாய் நியாயந்தீர்ப்பேன். பூமியானது அதின் எல்லாக் குடிகளோடும் கரைந்துபோகிறது, அதின் தூண்களை நான் நிலைநிறுத்துகிறேன். வீம்புக்காரரை நோக்கி, வீம்பு பேசாதேயுங்கள் என்றும், துன்மார்க்கரை நோக்கி, கொம்பை உயர்த்தாதிருங்கள் என்றும் சொன்னேன். உங்கள் கொம்பை உயரமாய் உயர்த்தாதிருங்கள், இறுமாப்புள்ள கழுத்துடையவர்களாய்ப் பேசாதிருங்கள். கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி, ஒருவனைத் தாழ்த்தி, ஒரு வனை உயர்த்துகிறார். கலங்கிப் பொங்குகிற மதுபானத்தினால் நிறைந்த பாத்திரம் கர்த்தருடைய கையிலிருக்கிறது, அதிலிருந்து வார்க்கிறார், பூமியிலுள்ள துன்மார்க்கர் யாவரும் அதின் வண்டல்களை உறிஞ்சிக் குடிப்பார்கள். நானோ என்றென்றைக்கும் இதை அறிவித்து, யாக்கோபின் தேவனைக் கீர்த்தனம்பண்ணுவேன். துன்மார்க்கருடைய கொம்புகளையெல்லாம் வெட்டிப்போடுவேன், நீதிமானுடைய கொம்புகளோ உயர்த்தப்படும்.
**- சங்கீதம் 75: 1-10**

### உமது கோபம் மூளும்போது உமக்கு முன்பாக நிற்பவன் யார்?

யூதாவில் தேவன் அறியப்பட்டவர், இஸ்ரவேலில் அவருடைய நாமம் பெரியது. சாலேமில் அவருடைய கூடாரமும், சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது. அங்கேயிருந்து வில்லின் அம்புகளையும், கேடகத்தையும், பட்டயத்தையும், யுத்தத்தையும் முறித்தார். மகத்துவமுள்ளவரே, கொள்ளையுள்ள பர்வதங்களைப்பார்க்கிலும் நீர் பிரகாசமுள்ளவர். தைரிய நெஞ்சுள்ளவர்கள் கொள்ளையிடப்பட்டு, நித்திரையடைந்து அசர்ந்தார்கள், வல்லமையுள்ள எல்லா மனுஷருடைய கைகளும் அவர்களுக்கு உதவாமற்போயிற்று. யாக்கோபின் தேவனே, உம்முடைய கண்டிதத்தினால் இரதங்களும் குதிரைகளும் உறங்கி விழுந்தது. நீர், நீரே, பயங்கரமானவர், உமது கோபம் மூளும்போது உமக்கு முன்பாக நிற்பவன் யார்? நியாயம் விசாரிக்கவும் பூமியில் சிறுமைப்பட்டவர்கள் யாவரையும் இரட்சிக்கவும், தேவரீர் எழுந்தருளினபோது, வானத்திலிருந்து, நியாயத்தீர்ப்புக் கேட்கப்பண்ணினீர், பூமி பயந்து அமர்ந்தது. மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும், மிஞ்சுங்கோபத்தை நீர் அடக்குவீர். பொருத்தனைபண்ணி அதை உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நிறைவேற்றுங்கள், அவரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும் பயங்கரமானவருக்குக் காணிக்கைகளைக் கொண்டுவரக்கடவர்கள். பிரபுக்களின் ஆவியை அடக்குவார், பூமியின் ராஜாக்களுக்கு அவர் பயங்கரமானவர். **- சங்கீதம் 76: 1-12**

### ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளிவிடுவாரோ?

நான் தேவனை நோக்கி என் சத்தத்தை உயர்த்திக் கெஞ்சினேன், என் சத்தத்தை தேவனிடத்தில் உயர்த்தினேன், அவர் எனக்குச் செவிகொடுத்தார். என் ஆபத்துநாளில் ஆண்டவரைத் தேடினேன், இரவிலும் என் கை தளராமல் விரிக்கப்பட்டிருந்தது, என் ஆத்துமா ஆறுதலடையாமற்போயிற்று. நான் தேவனை நினைத்தபோது அலறினேன், நான் தியானிக்கும்போது என் ஆவி தொய்ந்துபோயிற்று. நான் தூங்காதபடி என் கண்ணிமைகளைப் பிடித்திருக்கிறீர், நான் பேசமாட்டாதபடி சஞ்சலப்படுகிறேன். பூர்வநாட்களையும், ஆதிகாலத்து வருஷங்களையும் சிந்திக்கிறேன். இராக்காலத்தில் என் சங்கீதத்தை நான் நினைத்து, என் இருதயத்தோடே சம்பாஷித்துக்கொள்ளுகிறேன், என் ஆவி ஆராய்ச்சிசெய்தது. ஆண்டவர் நித்தியகாலமாய்த் தள்ளிவிடுவாரோ? இனி ஒருபோதும் தயை செய்யாதிருப்பாரோ? அவருடைய கிருபை முற்றிலும் அற்றுப்போயிற்றோ? வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்துபோயிற்றோ? தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ? கோபத்தினாலே தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக்கொண்டாரோ? என்றேன். அப்பொழுது நான்: இது என் பலவீனம், ஆனாலும் உன்னதமான வருடைய வலதுகரத்திலுள்ள வருஷங்களை நினைவுகூருவேன். கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன், உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன். தேவனே, உமது வழி பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது, நம்முடைய தேவனைப்போலப் பெரிய தேவன் யார்? அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே, ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணினீர். யாக்கோபு யோசேப்பு என்பவர்களின் புத்திரராகிய உம்முடைய ஜனங்களை, உமது புயத்தினாலே மீட்டுக்கொண்டீர். ஜலங்கள் உம்மைக் கண்டது, தேவனே, ஜலங்கள் உம்மைக் கண்டு தத்தளித்தது, ஆழங்களும் கலங்கினது. மேகங்கள் ஜலங்களைப் பொழிந்தது, ஆகாயமண்டலங்கள் முழக்கமிட்டது, உம்முடைய அம்புகளும் தெறிப்புண்டு பறந்தது. உம்முடைய குமுறலின் சத்தம் சுழல்காற்றில் முழங்கினது, மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது, பூமி குலுங்கி அதிர்ந்தது. உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது, உமது காலடிகள் தெரியப்படாமற்போயிற்று. மோசே ஆரோன் என்பவர்களின் கையால், உமது ஜனங்களை ஒரு ஆட்டுமந்தையைப்போல வழிநடத்தினீர்.
**- சங்கீதம் 77: 1-20**

### கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்

தாவீதின் குமாரனும் இஸ்ரவேலின் ராஜாவுமாகிய சாலொமோனின் நீதிமொழிகள்: இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து புத்திமதிகளை உணர்ந்து, விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதே சத்தை அடையலாம். இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும். புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான், விவேகி நல்லாலோசனைகளை அடைந்து, நீதி மொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும் அறிந்துகொள்வான். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள். என் மகனே, உன்தகப்பன் புத்தியைக் கேள், உன்தாயின் போதகத்தைத் தள்ளாதே.
**- நீதிமொழி 1: 1-8**

*தொடரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
ALL DEBT SOLUTIONS CR PLAN
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


CIBC
இந்தப் பொங்கலில் குடும்பத்துடன் அதிகம் பகிரவும்
$0 எனும் பரிமாற்றக் கட்டணத்துடன்[1], இந்த விடுமுறை காலத்தில் நீங்கள் இன்னும் அதிகம் கொடுக்கலாம்.
• இப்போது உங்கள் தகுதியான CIBC கிரெடிட் கார்டு மூலம் பணம் செலுத்தி, வெகுமதிகளைப் பெறுங்கள்[2,3]
• CIBC Online Banking® அல்லது CIBC Mobile Banking® மூலம் எந்தச் சாதனத்திலிருந்தும் எளிதாகப் பணம் அனுப்புங்கள், அது 24 மணிநேரத்திற்குள் வழங்கப்படும்[4]
• உங்கள் முதல் பரிமாற்றத்தில் $50 பெற்றிடுங்கள்[5]. பயன்படுத்துவதற்கான சலுகைக் குறியீடு: GMT50
Learn more at cibc.com/globaltransfer
CIBC Global Money Transfer™
[1]CIBC foreign exchange rates apply. A CIBC Global Money Transfer and a Foreign Exchange transaction count towards your allowable transaction limit. Bank account transaction fees may apply. Must have a CIBC savings or chequing account, personal line of credit or an eligible credit card to send a CIBC Global Money Transfer. [2]Only primary cardholders can use their eligible credit card account to pay for the CIBC Global Money Transfer™ service. [3]CIBC does not charge interest on a CIBC Global Money Transfer appearing on your statement if we receive full payment of the Amount Due (or for a CIBC Global Money Transfer that has been converted to an Installment Plan during that statement period, if we receive payment in full of the Balance) by the payment due date for that statement. Capitalized terms in this footnote have the meanings set out in the CIBC Cardholder Agreement. [4]Most transfers are completed by the next business day; some transfers require 2 to 3 business days. CIBC Cube Design is a trademark of CIBC. All other trademarks are owned by CIBC. [5]If you have a CIBC personal bank account (savings, chequing or a personal line of credit) but have not yet tried CIBC Global Money Transfer ("GMT"), request a GMT transfer and you will receive $50 CAD in your CIBC account in 4-6 weeks.

Life Insurance
Don't think twice
Life Insurance | Group Benefits
Critical Illness | RRSP / RESP
Disability
Investments
iNFORCE LIFe Financial Services Inc.
RESP Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing
UTHAYAN
உதயன்
Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1 (BETWEEN LAWRENCE & EGLINTON) TORONTO, ON. M1R 1P7
PARK PLAZA
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1290 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Thursday December 24, 2020

# ‘அழைத்தார் பிரபாகரன்’ என்ற நூலை எழுதிய கிரிக்கெட் வர்ணனையாளர் அப்துல் ஜப்பார் சென்னையில் காலமானார்




தமிழ் மொழியில் முதல் கிரிக்கெட் வர்ணனையாளர் என்ற பெருமையைப் பெற்றவரும் தலைவர் பிரகாகரன் அவர்களால் பாராட்டப்பெற்று பின்னர் "அழைத்தார் பிரபாகரன்” என்னும் நூலை எழுதிய பெருமைக்குரிய சாத்தான்குளம் அப்துல் ஜப்பார் (வயது 81) உடல்நலக் குறைவால் கடந்த செவ்வாய்க்கிழமை காலை காலமானார். *(தொடர்ச்சி உள்ளே 6ம் பக்கத்தில்)*

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் சாந்தா பஞ்சலிங்கம் நன்றி தெரிவிக்கின்றார்



அண்மையில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவராக மூன்றாவது தடவையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு சாந்தா பஞ்சலிங்கம், தன்மீது நம்பிக்கை வைத்திருக்கும் சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் மற்றும் தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகள் அனவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். (தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)

# பல்லின பத்திரிகையாளர்கள் கழக தலைவர் தோமஸ் சாரஸை சந்தித்த "ரூபம்" இணைய வானொலி அதிபர் சங்கர் சிவா



நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையன்று மாலை ரொரன்ரோ நகரசபை வளாகத்தில் அமைந்துள்ள கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் தோமஸ் சாரஸ் அவர்களை சந்தித்து பயனுள்ள கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார், கனடாவில் கடந்த 5 வருடங்களாக “ரூபம்“ என்னும் இணைய வானொலியை நடத்திவரும் திரு சங்கர்.

மேற்படி கலந்துரையாடலில், எதிர்காலத்தில் இணைய வானொலிகளுக்குரிய அனுமதியை கனடாவின் மத்திய அரசின் அங்கீகாரத்தை வழங்கும் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்குரிய வழி முறைகள் மற்றும் கனடா பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய ஆதரவு ஆகியவை தொடர்பாக பேசப்பட்டதாக திரு சங்கர் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு அறியத்தந்தார். இங்கே காணப்படும் படத்தில் தோமஸ் சாரஸ் மற்றும் சங்கர் ஆகியோர் நிற்பதைக் காணலாம்.

*(படங்கள்: சத்தியன்)*

# சர்வதேச குடிவரவாளர்களின் தினத்தைக் கொண்டாடிய கனடிய தேசம்



“உலகின் பல நாடுகளிலிருந்தும் கனடாவிற்கு வந்து குடியேறியவர்களினால் தான், கனடிய பொருளாதார மற்றும் சமூக அடித்தளம் உறுதியாக அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் கனடா தேசத்தின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். மேலும் முக்கியமாக, தற்போதைய கோவிட்-19 நோய்த்தொற்று நிறைந்ததும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயும் உள்ள இக்காலத்தில், வெளிநாடுகளிலிருந்து குடிவரவாளர்களாக வந்தவர்களே இங்கு விவசாயம் சார்ந்த உணவு விநியோகம், அத்தியாவசிய சுகாதார உபகரணங்களை விநியோகம் செய்யும் பணிகள், மற்றும் வேறு பல துறைகளில் எமது தேசத்திற்கு பல வழிகளிலும் உதவியாக உள்ளார்கள்”.

இவ்வாறு சர்வதேச குடிவரவாளர்களின் தினக் கொண்டாடடத்தை முன்னிட்டு சிறப்புச் செய்திகளை அரசாங்கத்தின் சார்பில் வெளியிட்டுள்ள The Honourable Marco E. L. Mendicino, Minister of Immigration, Refugees and Citizenship, the Honourable François-Philippe Champagne, Minister of Foreign Affairs, and the Honourable Karina Gould, Minister of International Development, ஆகியோர் தெரிவித்துள்ளனர். கனடாவின் ஒட்டாவஇா மாநகரிலிருந்து வெளியாகியுள்ள இந்த அறிக்கைகள் தமிழ் பேசும் ஊடக நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ”கடந்த 200 ஆண்டுகளாக, வெளிநாடுகளிலிருந்து கனடாவிற்கு குடிவரவாளர்களாக வந்தவர்கள் இந்த நாட்டுக்கு மனித உரிமைகளைகள் தொடர்பான விடயங்களையும் ஏனைய பல நன்மைகளையும் தங்கள் நாட்டிலிருந்து எமது கனடா தேசத்திற்கு கொண்டுவந்துள்ளார்கள்.

அத்துடன், கனடாவில் குடியேறியுள்ள வெளி நாட்டவர்கள் இங்கு அனுபவிக்கும் சிரமங்களையும் நாம் உணர்கின்றோம். எனவே இந்த முக்கியமான நாளில் அவர்களின் தாங்கும் சக்தியையும் பொறுமையையும் மதிக்கும் வகையில் இன்றைய நாளை கொண்டாடுகின்றோம். இந்த நாட்டுக்கு வரும் குடிவரவாளர்கள், அகதிக் கோரிக்கை யாளர்கள், அகதிகள், மற்றும் சர்வதேச ரீதியாக பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரையும் நாம் ஒரே கண் கொண்டே பார்க்கின்றோம்.”

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca